KALANILAYAM

தனிப்பிரதி விலை அணு 0-2-6.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
6 மாதம் ரூ. 3 12 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

1 JAN 1934

Vol 6] 1933 ளு அக்டோபர் மீ 12உ [No. 40

பொருளடக்கம்.


1. தலையங்கம் (Leader) 725
2. அப்பர் (64 கலை-வியாகரணம்-சந்தவிருத்தம்)
E. N. தணிகாசல முதலியார், B.A.B.L. 727
3. தத்வஞான மென்ற வென்னை
T. R. இராஜகோபால் 729
4. ந[illegible]ர் வைபவம் (5-ம் பத்து, 10-ம் தசகம்)
[illegible] இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 730
5. காற்[illegible]மழை (அங்கம் 5. களம் 1.)
Shakespeare's Tempest 731
6. தமிழ்ப் பாடம்
அஷ்ட பிரபந்தம்—திருவரங்கத்தந்தாதி 733
7. கலித்தொகை (பாலைக்கலி, 29)
T. A. கனகசபாபதி முதலியார் 735
8. மானத சாத்திரம்—உன்னிப்பும் அக்கரையும்
T. P. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை M.A.,B.L., 736
9. கம்பராமாயணம் (சடாயு வுயிர்நீத்த படலம்)
T. N. சேஷாசலம் B.A.B.L. 738
10. வர்த்தமானம் 740


## கலாநிலயம்

189164

### புன்மையின் மேன்மை 3.

மானுடச் செம்மையிலும் நன்மையிலும் மனம் வைத்துள்ளோம் என்பவர், இம்மையை விட்டுத் தம் நாட்டத்தைக்கழற்றுராயின், உண்மையில் மனிதனுக்கு ஒன்றும் உதவி செய்பவர் ஆகமாட்டார் என்பது முன்னிதழில் எடுத்தெழுதிய அரிஸ்ட்டாட்டலின் வாக்கியங்களிலிருந்து தெரியவந்திருக்கும். கருதக்கூடியதும் கட்டுக்குட்பட்டது மாகிய இந்தச் சிறு வாழ்க்கையின் எல்லையைக்கடந்து ஒன்று நினைக்கவும் விழையோம் என்றக்கால் நாம் மனிதர் என்ற பெயரிற்கே உரியவராகமாட்டோம். பின், மானுடச் செம்மையும் நன்மையும் எங்கிருந்து யாருக்கு வருமென்று பேசுவோம். எனின், உலகத்தின், சீர்திருத்தமென்றுசெப்புவதெல்லாம் மானுடமல்லாப்பேதைமை. உலகம் புதுப் பிறவியன்றோ எடுத்தல் வேண்டும். மானுடமரபு கெடாவகையில் வாழ்ந்து ஆன்மவுணர்வினிற்கு ஊக்கம் அளிக்கவல்லவர் யாரோ அவரே பெரியவர், அவரே நம்மை உய்விக்க வந்தவர். ஆதலினல், முன்னேசொல்லிய அரிஸ்ட்டாட்டல்என்பவர் ஓரிடத்தில் பின்வருமாறு உரைக்கின்றார்—

While I have life and strength I shall never cease from the practice and the teaching of philosophy, exhorting anyone whom I meet and saying to him after my manner, you, my friend and citizen, of the great and mighty and wise city of Athens—are you not ashamed of heaping up the greatest amount of money and honour and reputation, and caring so little about wisdom, truth and the greatest improvement of the soul, which you never regard or heed at all" ........"we should not give heed to those who bid one think as a mortal, but so far as we can we should make ourselves immortal and do all with a view of life in accord with the best principles in us.

["இறப்பதோடு உங்கள்சரிதை முடிந்துவிடுகின்றதென்றுகூறி அதற்கிணங்க இவ்வுலகவாழ்க்கையை அமைத்துக்கொள்ளும்படி சொல்கின்றவர்களை ஒருபோதும் நம்பாதீர். நம் ஆன்மா அழிவற்றது; அதன் மேன்மைக்குத் தக்கன புரிமின்—வேறு இம்மையில் நன்மையென்பது எதனையும் தேடவேண்டா; தத்துவஞானம் உண்டாகவல்ல வழியைப் பிறருக்குக் கற்றுக்கொடுங்கள், அதன்படி நீங்களும் இடையறாமல் ஒழுகுங்கள்,—என்பது இவ்வாங்கில வாக்கியங்களின் கருத்து.]

மானுட நன்மையின் செய்தி இவ்வாருக, கடவுளுணர்வும் மதப்பற்றும் மனம்புகாமலே மானுடஅறமும் இன்பமும் கைவரக்கூடும் என்றுரைக்கும் அன்னோர் கூற்றையுஞ் சற்றே சோதிப்போம். "அறத்தாறு ஒழுகுமின், உங்களுக்கு அதனால் இன்பமுண்டு" என இயம்புவா ராகின்றார் அவர். இதனளவில் அவ்வுரையிற்பிழையுமில்லை. கடவுள்நினைவாற் கனிந்த உள்ளம் பெருகப்பெருகப் பேசுவாரும் இதனைச் சொல்வார். கடவுளேகதியாமென்ற மாபெரும் மதங்கள், வாழ்க்கைச்செம்மையில்மட்டுமே ஈடுபட்டிருப்போர் கூறுகின்றவைகளை எல்லாம் கூறலாம். ஆயினும் அதனைக் கொண்டு ஒருவரும் வஞ்சிக்கப்பட லாகாது. மதவுணர்வு கூறுவனவற்றையெல்லாம் இம்மானுடச்செம்மையோ கூறமாட்டாது. "அறத்தால் வருவதே இன்

பம்" என்று உரைப்பதற்கும், "அறத்தால் இன்பமே வரும்" என்று கொள்வதற்கும் மிகப் பெரிய வேற்றுமை இருக்கின்றது. சற்றே உற்றுநோக்குமிடத்து இவ்வேற்றுமை புலப்படும். இன்பம் என்பதற்கெல்லாம் பிறப்பிடம் அறமே, அறத்தாறன்றி வேறு இன்பம் எய்துவதற்குரிய வழியும் வகையும் இல்லை என்று திருவள்ளுவர் வற்புறுத்துகின்றார். அது தக்கதே. எனினும், அறம் செய்தால் இன்றியமையாமல் இன்பமே வந்துசேரும் என்ற பொருள் அவர் வாசகத்திற்கில்லை. இதற்கெதிர் அறத்தால் இன்பமே வரும், என்றக்கால், இன்பம் வாராமல் தீராது என்பது திண்ணமாக எடுத் தியம்பப்பெறுகின்றது. மாநுடச் செம்மையில் மாத்திரம் மனம்வைத்திருப்போர் கொள்கை இது. இந்தக் கொள்கையில் ஆபத்து அதிகம் உளது. எங்ஙனம் என்று பார்ப்போம்:

எவ்வளவு திறமையுடன் ஜனசமூகவாழ்க்கையைச் சீர்திருத்தி உரிமைகளையும் பொருளாதார நிலைமைகளையும் முறைசெய்து அமைத்தாலும், தனித்தனி துன்பமும் துயரும் எய்தாமல் எத்தனை நல்லவர்களும் தப்ப இயலாது. அறம் பிறழாமல் ஒழுகுகின்ற நல்லவர்கள் இப் பூவுலகவாழ்க்கையில் தோல்வியுற்றுத் துன்பம் பல எய்தி வருந்துவதை எங்குங் காண்கின்றோம். எனின், "அறத்தால் இன்பமே வரும் ஆதலின் அறத்தைச் செய்மின்" என்று சாற்றுவார் அறிவுரை என்ன ஆயிற்று. இவ்விதம் அவ்வாசகம் பொய்த்துப் போவதைக் காணுந்தோறும்காணுந்தோறும்மனிதன் அறத்தின்பால் வைத்திருந்த பற்றினை நழுவவிடுவது இயற்கையே. அறத்தில் கொண்டிருந்த நம்பிக்கைமாத்திரம் தளர்கின்றதேயன்றி இவனுக்கு வலிமையளிக்கத்தகுந்த எண்ணம் வேறொன்றும் வளர்வதற்கில்லாமல், உழல்பவனாகின்றான். அறத்தால் இன்பம் வரவில்லையாகையால், இனி மறத்தானே இன்பம் வரும் போலும் என்று நினைக்கத் தலைப்படுவானாயின் அது இயற்கையே என்பதை யார் மறுப்பார். அவனுக்குக் கற்பித்த பாடத்தை முடிவுறச்செலுத்துபவன் ஆகின்றான், அவ்வளவே. நம்முடைய அறத்திற்கும் நம்முடைய இன்பத்திற்கும் நம்மையே ஆதாரமாகவைத்து அவையிரண்டையும் நமக்குள்ளே தொடர்புபடுத்திக்கொள்வதால் விளையுங் கேடு இது.

இதற்கெதிர், கடவுளைச் சார்ந்தவொரு நினைவோடு நிகழ்த்தப்படும் அறத்தின் நாட்டமும் தன்மையும், ஒன்றற்கும் அசையாத ஒரு சிறப்புவாய்ந்து, தன்னிலை நிற்கவல்லதாகின்ற பெற்றியை உணரலாம். மாநுட நன்மைசெம்மைகளை மதித்தளப்போர், அறத்தையும் அதன் பயனெனக் கொள்ளப்படும் இன்பத்தையும் அளந்து விவகரிக்கின்றனர். கடவுளைச் சூழ்ந்து வளரும் மதவுணர்வோ, மற்றெல்லாவற்றையும்போன்றே அறத்தையும், அக் கடவுள்சித்தத்தின் பழுதற்ற சாரமாகக் கருதும். ஆகையால், பொருளின் அளவு விலையென்றேனும் விலையினளவு பொருளென்றேனும் எண்ணும் வகை இவ் வுத்தமர்க்கு இல்லை. விலையும் பொருளும் எல்லாம் சென்றடங்குகின்றதாகிய அம் முழுமுதல் மெய்ம்மை மனத்தினை ஒளிசெய்திருக்க, இன்பத்தோடு இணைக்கப்படாத அறமும் இவர்களுக்கு உண்மையாகவும் உறுதியாகவும் இருக்கும். அறத்தினை அதன் பயனோடு சேர்ப்பதுமாத்திரம் போதாது, அது நல்லது மன்று; அப் பயனைக் கொண்டுபோய், அறத்திற்கும் பயனிற்கும் அதனைச் செய்து அனுபவிக்கும் முடிவிற்கும் அப்பாற் கடந்தவோர் மெய்ம்மையில் சேர்த்தாலன்றி, அயர்வும் ஐயமும் எய்தாமல் மாநுட நன்மையும் செம்மையும் நிலைநிற்பதெங்ஙனம். இந்தப் பேருதவி செய்யும் புண்ணியத்தது மதவுணர்ச்சி; இப்பேருதவியை உருச்செய்துகாட்டுதற்கே, மெய் விளங்கவரு குருநிலத்தினிடை பகவத்கீதை அவதரித்தது.

இனி, இன்பம் வருவதும் வாராததும் ஒருபுறமிருக்க, மாநுடச் செம்மையில் மட்டுமே மனம் வைத்திருப்பவர்தம் கருத்தின்படி 'அறம்' எனப்படுவதுதான் என்ன? கடவுட் சித்தத்தின் எதிரொளி என்று அதனைக் கருதினாலன்றி வேறொரு பொருள் வாய்த்தல் அரிது. நம் பொறிகளும் புலன்களும் வரம்புகடந்து விவகரிக்காமல் மிதமாக அடக்கியாள்வதுதானறமாம் என்று அன்னவர் கருதுவார் எனச் சிறிது முன்னர்க் கூறினோம். எல்லாவற்றிலும் மனிதர் மிதமாக இருக்க வேண்டுமென்பார் அவர். நம்முடைய ஆசையை அடக்குதல் என்பதன் கருத்து யாது? மானுட இயற்கைக்கு அறத்தின்நிலை முரண்பட்டு இருக்கின்றதென்னும் கொள்கை இதனில் அடங்கி இருக்கின்றது. எனின், மனித இயற்கைக்குரிய ஆசைமுதலியவைகளை மிதஞ்செய்ய உபயோகிக்கும் அடக்குமுறை[illegible] அறம்; அல்லது, மானுட இயற்கையை வேறோ[illegible] நெறிக்கு உய்க்கும் முறையா அது? வெறும் அடக்குமுறையாயின், மற்றெல்லா அடக்குமுறைகளையும் போல், அறமும் நன்மையற்ற வெறுமையாகிவிடும். மற்று, அறமென்பது அடக்குமுறை மாத்திரமன்றி அதற்கு வேறோர் நினைவும் நிலையும் உளவாயின், எந்த நினைவினால் அவ்வறம் நிறைகின்றதென்று கருதுவோம்? அடக்குமுறைக்கும் மேலான ஒரு நெறியுளதென நினைக்கலாகின்ற அந்நினைவுதான் மனிதனைக் கடவுளுடன் தொடர்புபடுத்துகின்றது. இந்தத்தொடர்பு இல்லாதவரையில் அறமானது தன் வெறும் வாயை மென்று கிடக்கின்றதென்று கூறலாம்.

இதுவுமன்றி, ஆசை இழுத்த வழியெல்லாம் அலையாமலும், அதனை அறவே ஒழிக்க முயலாமலும் எல்லாவற்றிலும் மிதமாக இருப்பதே அறமென்றுரைக்கும் அவ்வாசகமும் பொருளுடையதுபோல் தோன்றினும் உண்மையில் பொருள் அற்றதே. அறமும் மறமும் அளவால் வேறுபடுவனவல்ல, பகலும் இரவும் போலும் தன்மையாலேயே வேறுபடும். துலாக்கோலால் தூக்கப்படுமோ அறம்? துலாக்கோலறத்திற்கும் உண்மை அறத்திற்கும் உள்ள வேறுபாடு நிரந்தர மெய்ம்மையின் நுட்பத்தால் உணரப்பட வேண்டும். உலகவாழ்க்கையில் மாறிமாறிவருகின்ற அனுபவங்களைக்கடந்து ஒன்றற்கும் அசையாமல் எப்போதும் மாறாமல் நிற்கின்ற ஒரு மெய்ம்மையை உட்கொண்டாலன்றி, எல்லா நிலைக்கும் இயன்ற அறத்தினை அறிந்துநிகழ்த்துதல் இயலாது. அந்தவொரு திப்பிய உணர்வில் இவ்வுலகிற் குரிய மிதம் அமிதம் என்ற அளவுகள் இல்லை.

எதனை எப்படி 'மிதம்' என்று உணர்வது? மிதம் என்னும் இது ஒருவராலும் எய்யமாட்டாமல் குறி தவறிடும். மூர்க்கம் என்றால் மூர்க்கந்தான், பொறுமை என்றால் பொறுமைதான், அது மறம், இது அறம். இனி இவைகளுக்கிடையே 'மிதம்' என்னும் எல்லையை எங்கே நிறுவுவோம். வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்று தன் வலி செல்லுமிடமெல்லாம் நலிவது மூர்க்கமறம்; நலிவார் நலிந்தாலும், அதனை விலக்கிக் கொள்ளவல்ல வலியிருந்தாலும், அது செய்யாமல், நம்மறு கன்னத்தைக் காட்டவேண்டியது பொறுமை அறம். இவ்விரண்டையும் அமிதமென்று அழைப்பவர்தம் அறத்தை அவைகளுக்கிடையே எந்தஎல்லையில் வைக்கத்துணியலாம். அத்துணைமூர்க்கமும்வேண்டா இத்துணைப் பொறுமையும் வேண்டா, என்றால், "உனக்கொரு தீங்குசெய்வார்க்கு எதிர்த்தீங்கு செய்யும் அளவிலே உன் மூர்க்கத்தை அடக்கிப் பொறுமையை வளர்த்துக்கொள்" என்றன்றோ பொய்யறிவுகூறவேண்டிவரும். இதன்படி, கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், பழிவாங்குவதே இனிப் பொறுமை என்றும் அறமென்றும் புகழ்பெறும் வண்ணம் முடிதல் இன்றியமையாததாகின்றது. இவ்வண்ணம் பார்க்குமிடத்து, மிதமே அமிதமாகிவிடுதல் புலப்படும். இந்த மிதத்தைக் கடந்து யார் மேற்செல்கின்றாரோ அவர்தாம் அறத்தின் மூர்த்தி. இயேசுகிறிஸ்து கடந்துசென்று நம்மையும் கடக்கச் சொல்கின்றார்; திருவள்ளுவர், "மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம் தகுதியால் வென்றுவிடல்" என்றபோது, மிகுதிக்கு எதிர் மிதத்தைக் கூறாமல் அதற்கெதிர் தகுதியையே விளம்பினார். ஏனெனில், இன்னவர்தம் அறம், மனிதனைச் சார்ந்த அளவினது அன்று; கடவுளை ஓர்ந்த நிலையினது. இத்தகைய அறத்தினை நிகழ்த்துவதற்கு இன்னவர்க்கு ஒரு அளவும் வேண்டா, ஒரு முயற்சியும் வேண்டா. மதவுணர்வுடைய மேன்மையோர் ஆன்மாவின் ஆழத்திலுள்ள இயற்கையில் வாழ்கின்றவர்களேயன்றி மனிதனுடைய அளவுகோலால் மோசம்போகின்றவர்கள் அல்லர். பைபிலும் திருக்குறளும் பகவத்கீதையும் உலக வாழ்க்கையைச் சீர்திருத்தவேண்டும் என்பதையே முதற்கருத்தாகக் கொண்டு பிறந்தவைகளல்ல. அவைகளில் அடங்கிய நம்பிக்கையானது இவ்வுலகவாழ்க்கையையே கடந்தது. ஆதலின், அந்நம்பிக்கையை உடைய சான்றோர், யாதும் முயற்சியின்றிச் சாதித்திருப்பவைகளால்இவ்வாழ்க்கையைவேறாகவே மாற்றுகின்ற உபகாரிகளாகின்றார்.

முடிவாக ஒன்று கூறுவோம். அறிவின் திறமென்று சொல்லி மானுட வாழ்க்கையையும் மதப்பற்றையும் பற்றி யாதும் ஆராயப் புகவேண்டா. இவ்வகைத்தாய ஆராய்ச்சியால் வருகின்ற முடிவுகளெல்லாம் மனிதனுக்கு இயற்கையாகவுள்ள உணர்வின் மரபினைப் பழுது செய்வதன்றி வேறோர் உறுதியும் பயக்கமாட்டா என்பதை விளக்கவே, அம்முடிவுகளின் பிழை குறைகளை விளக்கிக் காட்டினோம். மானுடப் பிறவி எத்துணைப் புல்லியதாயினும், உலகத்தில் விவகரிக்கின்ற மாநுட வாழ்க்கை எத்துணை இழிந்ததேயாயினும், குலமரபும் உள்ளுணர்வும் இப்பிறவியையும் வாழ்க்கையையும் கடந்த ஓர் கடவுளையும் அக்கடவுளை வழிபடும் மதத்தினையும் நாடும்படி மனிதனை இயக்குகின்றன. அம் மரபு கெடும்படி ஒன்றுஞ் செய்யாமல் நம் சீர்திருத்தகாரர்கள் விட்டுவிடுவார்களாயின் அதுவே கோடி பெறும். இத்துணைப் புன்மைகளுக்கிடையே மனிதனுடைய மேன்மைக்குச் சான்றாயிருப்பது, கடவுள் என்னும் ஒருதிப்பிய கருத்திற்கு அவன் கர்த்தாவாக அமைந்திருப்பதேயாம். ரஷ்ய தேயத்து நூலாசிரியர் டாஸ்ட்டோவ்ஸ்கி என்பவர்,

What would be marvellous is not that God should really exist; the marvel is that such an idea, of the necessity of God, could enter the bead of such a savage, vicious beast as man. So holy it is, so touching, so wise and so great credit it does to man

என, இத்துணை மூர்க்கமும் மூடமும் வாய்ந்த இந்த மனிதமிருகத்தின் தலையில் கடவுள் என்னும் கருத்தும் அதன் அவசியமும் எவ்வாறு நுழைந்ததோ, என்றுவியந்து, இதுவொன்றே மனிதனுக்கு அளவிலா மதிப்பையும் பெருமையையும் அளிக்கின்றதென அறைகின்றார். வேறுவேறுபுதியமதிப்புக்கள் தேடிக்கொள்கின்றமுயற்சியில், மனிதர் இன்று தம் மூதாதைகள் தேடி வைத்திருக்கின்ற நிதியமாம் அம்மதிப்பையும் இழக்கநேர்கின்ற நஷ்டத்தையும் பரிபவத்தையும் என்னென்று சொல்லி இரங்குவது. புன்பிறவி இதுவானதாற்றான், அப் புன்பிறவியில் எவ்வண்ணம் மனிதர் மேன்மையிலும்மேன்மையாய இக்கடவுளுணர்வு பெற்றனரோ என்று வியந்து புகழப்படுகின்றனர். இந்தப் புகழையும் மேன்மையையும் இழந்து அப்புன்மையே இரட்டிக்கும்படி இழியாமல் மானுடமரபைக் காத்துவைக்கக் கவிவரர்கள் கைதந்து உதவுகின்றார். கடவுளின் மெய்ம்மை ஓர் முழுமையாகிய தத்துவமாகையால், முழுமைக் காட்சியில் நம் மனம் பழகப்பழக, அம் முழுமுதற்கடவுளைத் தழுவுகின்ற மனத்தின் மரபு உருவமும் உறுதியும் அடைகின்றது. 'காட்சியேகாணல்' என்னுந்தலைப்புடைய கட்டுரையில், கலைப் பயிற்சி அம்முழுமையில் நம்மனத்தை எங்ஙனம் பழக்கிவைக்கின்றதென்பதை விளக்கினோம். எனின், மாநுடமேன்மையை அதன்புன்மையிலேயும்காணும் வண்ணம் கலையுணர்வினால் செய்வதற்கு முயல்வதாம் இக் கலாநிலயம்.

---

# அப்பர்

## அப்பரும் அறுபத்தினான்கு கலைகளும்—30. வியாகரணம்

[718-வது பக்கத் தொடர்ச்சி]

சந்தவிருத்தங்களும் அப்பர் திருமுறைகளும்

### I. சந்த வுறுப்பும் தமிழில் உண்டான குழப்பமும்.

தமிழில் சந்தம்எனப்படுவதன் இலக்கணம் யாதெனவினவின், தற்காலத்தில் பல புலவர்களும் தடுமாறுகின்றனர். அதைஒருவகை இசையென்பர்சிலர். சிலர் சந்தக்குழிப்பில் அடங்குவது சந்தமென்றும், தாளச் சந்தம், தன்னச் சந்தம், தனனச் சந்தம் என்றும் இவற்றை ஒருவகையில் அடக்கி இதுவொரு சந்தம் என்றும், மற்றொருவகையிலடக்கி மற்றொரு வகைச்சந்தமென்றும் கூறுவர். அதாவது யாதொரு இலக்கணமும் கூறாது ஒலியைப் போன்றதோர் மற்றொரு ஒலி காட்டுதல் இலக்கணமென விண்டனர். அருணகிரிநாதர் பட்டினத்தடிகள் முதலானோர் பாடிய திருப்புகழ்க் கழிநெடிலாசிரிய விருத்தங்களுக்குச் சந்தக்குழிப்பு அந்நூல்களில் தலைப்பாய் எழுதப்பட்

டிருக்கக் காணலாம். ஆயினும் அவை இலக்கணமாகுமோ? தன்ன, தனதன, தனனன, தானன இவற்றிற்குள் இசையிலாயினும் இயலிலாயினும் பேதம் இதுவென எடுத்துக்காட்டுவோ ரிலர்.

இடைச்சங்கத்தார்காலத்திலும் அதற்குமுன்னும் தமிழை மூவகையிலும் மாணவர் பயின்றனர். இயல், இசை, நாடகம் என்பன இப்போது வேறுபட்டவாறு வேறுபடாமல் ஒன்றாய் அமைத்துத் தமிழ்மாதை மும்முகங்களிற் கண்டு நமது முன்னோர் பெரிதும் இன்புற்றனர். ஆயினும் அவை நாளடைவில் வேறுபட, இயற்றமிழ்ப் புலவர்கள் நால்வகைப் பாக்களை கைப்பற்றவும், இவற்றிற்குப் புறனை, துறைகள் தாழிசைகள் கொச்சகங்கள் ஆயவைகளை இசைவல்லோர் தமதெல்லையில் உட்படுத்தவும்,நாடகத்தை விலைமாதரும் தெருக் கூத்தாடிகளும் கைப்பற்றவும், நேர்ந்ததால் தமிழ் உடைந்தது. இவ்வகை நிலையில் கடைச்சங்கத்தார்காலத்தில் சங்கப்புலவர்களின்கூட்டம், பிரான்ஸ்தேசப்புலவர் கல்வியாலயம் (French Academy) போல் சுருங்கிய பார்வையும், மிதமற்ற அகங்காரமும் பெற்று, அந் நாற்பத்தொன்பது பேர்களே, தமிழுலகக் கவிகளென்றும், ஏனையோர் அல்லரென்றும், சங்கநூலே நூலென்றும், ஏனைய நூல்களல்லவென்றும், அப்புலவர் எண்ணத் தலைப்பட்டுத் தமிழகம் நான்மாட கூடலன்றி வேறொன்று மாகாததுபோல் நமது மொழி படாத பாடு பட்டது. இக் கேட்டை யொழிக்கவே, திருவள்ளுவ நாயனர் அவதரித்தனர். கடைச்சங்கம் அழிந்தபின்னர், தமிழிலக்கிய ஆட்சியிற் கொடுங்கோல் ஒழிந்ததேனும், தமிழ்ச் சங்கம் இன்மையால் தமிழ்மொழி அரசனில்லா நாடுபோல் ஆயிற்று. இதனால் தமிழர் தமது மொழியில் கருத்தினைச் செலுத்தாமல் வடமொழியைக் கொண்டாடுவாராயினர். வடநூலில் வழங்கிய விருத்தங்கள் தமிழில் நுழையலாயின. அவற்றிற்குத் தமிழ்ச் செய்யுள்கள் புறனடை கூறும் துணைசெய்தன. இவ்வாறு விருத்தங்களும், ஆரியத்தில் வழங்குகின்ற சந்தங்களும் தமிழில் பெரும்பாலும் நுழையலாயின. தமிழ்ப் பாக்கள் ஆதரவு பெறுமனும், ஆரியநடைச் செய்யுள்களான விருத்தங்களும், ஆரிய சந்தங்களும் தமிழில் போற்றப்பட்டும் வரும்நாளில், நம்முடைய சமயத்தை ஈடேற்றப் பிறந்த திருநாவுக்கரசும், திருஞானசம்பந்தரும் நமது இலக்கியத்தைச் சுத்தஞ் செய்ய ஆரம்பித்தனர். இவ் விருவோரும் ஆரிய மொழியில் நிபுணரென்பது அவர் தேவார அகச்சான்றுகளால் விளங்குகின்றது.

சந்தமுடைய ஆரிய விருத்தங்களிலிருந்து முதல் முதல் தமிழிற் புகுந்தது திருச்சந்த விருத்தமென்னும் ஒருவகையாகிய எழுசீர்ச் சந்தவிருத்தங்களாம். இதைச் சிவவாக்கியாரிலும், திருமழிசை ஆழ்வார் பாடல்களிலும் காணலாம். இது மூன்றுமாத்திரைச் சீர்களால் ஆக்கப்பட்டு அந்தத்தில் நெடிலொன்று பெறும். அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தத்திலும், சந்தக் கலித்துறையிலும், கலிவிருத்தத்திலும் திருஞானசம்பந்தர் இவ்வகை யாப்பமைத்துப் பாடித் தமிழில் பற்பல வகைகளில் சந்தவிருத்தங்கள் உண்டாக்கினர். இதன்றியும் பண்டைய பாக்களின் துறை தாழிசை கொச்சகங்களையும் செப்பனிட்டுச் சீகாமரப் பண்ணில் பாடுவாராயினர். அதனால் திருநாவுக்கரசுநாயனர்புகலிவேந்தர்முதலாயினோர் பாடியசெய்யுள்களை அலகிடுவோமானல், அவை ஒருவகையான யாப்பா இருக்கமாட்டா. அவைகளைப் பின்னர்க் காணலாம்.

தமிழர் ஆரியவிருத்தங்களை அங்கீகரித்தாரேனும் தமிழ்யாப்பு வழக்கும் அவரை அறியாமலே நுழைந்தது. அவற்றுள் முக்கியமானது விருத்தச் சீர்களில் வெண்டளை யமைப்பு வரநேர்ந்து கட்டளைக் கலித்துறை வெண்பாவின் யாப்பைப் பின்பற்றியதென்று முன்னரே கண்டோம். கலிவிருத்தம் வெண்பாவின் நான்காம் அடி நீட்டுவதால் உண்டாகும். இதனைத் தமிழ் நாவலர் பெரும்பாலும் “நாலக்கரமா நவில் வெண்டளையில், சாலப்பகர்வர்” என விருத்தப்பாவிய லாசிரியர் கூறுகின்றார்:—

நிரைநேர் முதலா நிகழும் வகையான்
இருபா லவைதம் மியல்பென் றனரால்
நிரையே முதலா நிகழ்தோ டகமென்
றுரையும் பெயரோ டொளிர்காந் தியுமே

—விருத்தப்பாவியல்.

முன்னர் அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தங்களைக் கூறுமிடத்து அவற்றுள் ஆறுவது வகுப்பாக அமைந்தது, “கடையது மா, விளமாச்சீர், கலந்தது வெண்டளை யென்ப” என்னும் விதியை அநுசரித்ததெனக் காட்டினோம்; விதிவிலக்கான விருத்தங்களிலும் வெண்டளை வருவதும் கண்டோம். சந்தக்கலித்துறையிலும், அறுசீர்ச் சந்த விருத்தத்திலும், எழுசீர்ச் சந்தவிருத்தங்களிலும் வெண்டளையா லாக்கப்பட்ட சந்தங்களே மிகவும் போற்றப்படுவதைப் பின்னர்க் காணலாம்.

இவ்வாறு தமிழ்யாப்பும் ஆரியநடை விருத்தங்களும் சாலவும் நெருங்கிக் கலந்த காரணத்தால், தமிழ் யாப்பிலக்கணத்தில் காணாத விருத்தங்கள் தமிழ்ச் செய்யுட்களாய் வழங்கலாமா என்னும் கேள்வியே தமிழில் வாராமல், தமிழ்ச் செய்யுள்களைப்போல் தமிழில் விருத்தியடைந்து, கம்பன், சைவ சமயகுரவர்கள் சேக்கிழார் ஆழ்வார்கள் முதலாயினோரால் அளவற்ற ஆதரவு பெற்றன.

ஆயினும் இத்துணைக் கவிவாணர்களில் ஒருவரேனும் தாம் எழுதிய விருத்தங்களின் யாப்பு யாதென விளக்காதொழிந்தனர். இவரைப் பின்பற்றிவந்த கவிவாணர்களும் முன்னோர் பாடிய விருத்தங்கள்போல் பாடினரேயன்றி அவர்களும் விருத்தங்களுக்கு யாப்பிலக்கணம் மொழியா தொழிந்தனர்.

கந்தபுராணத்து விநாயகக்கடவுள் வாழ்த்துக்கென வெளிவந்த வீரசோழியத்திலே, லகு குரு என்னும் ஆரிய அசைப்போக்கு ஒருவாறு குறிப்பிடப்பட்டது. ஆயினும் சந்தவிருத்தங்களில் அன்னவற்றைப் பயன்படுத்தும் வகைகளை அவ் வாசிரியருங்காட்டவில்லை. பிறகுவந்த பவணந்தியோ இலக்கணத்தை முற்றுப்பெற வைக்கவில்லை. அவர் செய்த ‘செய்யுள்’ இலக்கணச் சூத்திரமும், நன்னூலின் இறுதியில் கூறிய “பழையன கழிதலும், புதியன புகுதலும், வழுவல காலவகையினானே” என்றதும், காலத்திற்கேற்ற கோலங்களான பல்வகை விகாரங்களுக்கு நமது இலக்கியங்களினுள் இடங்கொடுக்கலாயின. “விளையாட்டாய்க் கவிதைதனை விரைந்து பாடித் தெட்டுதற்கோ அறிவிலாத் துரைகளுண்டு, தேசமெங்கும் புலவரெனத் திரி



யலாமே” என்று நம் படிக்காசுப் புலவர் கூறியவாறு நமது தமிழிலக்கியம் எவ்வகை நூலுக்கும் எத்தகைய செய்யுளுக்கும் இடங்கொடுக்கின்றதன்றோ? இந்தக் குழப்பத்தை ஒருவாறு தணித்தவர் சென்ற நூற்றாண்டின் இறுதியிலிருந்த வழிக்கறிஞரும், முத்தமிழ்ச் செல்வமும் ஆரியக்கல்வியும் வாய்ந்தவரும் ஆகிய திருவாளர் திருப்பனங்காடு வீரபத்திரமுதலியார் அவர்கள் 1885-ம் ஆண்டில் இவர் இயற்றிய விருத்தப்பாவியல் வெளிவந்தும், சுமார் 1000 பிரதிகள் இலவசத்தில் வழங்கப்பட்டும், அதைப் பயன்படுத்திய தமிழ்மக்கள் சிலரே. அந்நூலின் துணையால் தமிழ்ச்சந்த இலக்கணமும் சந்தவிருத்த வகைகளையும் ஆராய்வோம்.

## தத்வஞான மென்றா லென்னை ?

[724-வது பக்கத் தொடர்ச்சி]

“ஒரே விதப் பிரச்னைகளை யெழுப்பி, மீட்டு மீட்டும் அவைகளையே பற்றிச் சுற்றிச்சுற்றி, விதம்விதமான நூதன கோள்களைப் பின்னிக் கடினநடையில் மனக்கோட்டைகளைத் தோற்றுவிப்பதைத் தவிர்த்து வேறெந்தப் பிரயோஜனத்தையும் நாம் பெற்றது மில்லை, இனிப் பெறப்போவது மில்லை. பற்பல ததுத்வநூல்களும் தத்துவக்கற்பனைகளும் பிரசுரிக்கப்பட்டபோதிலும், பொதுவாக மாந்தரைப் பிடித்து வருத்துகின்ற இன்னலிடர்களும் பேதைமையும் எள்ளளவேனுங் குறையவில்லை! ஆதலால் அவ்விஷயங்களில் இனியாவது தலையிட்டுத் தயங்காமல் கண்முன் தோன்றுபவைகளை ஆராய்ந்து கைபற்றி வாணாளைச் செலுத்துவதன்றோ உத்தம தத்வம்” எனச் சில ‘விவேகிகள்’ கழறுகிறார்கள். தத்வப்பிரச்னைகள் ஒரே தன்மையனவாகத் தோன்றியபோதிலும், அவைகளை ஆராய்ந்து விசாரித்து அறியப்படும் வழிகள் பலப்பலவாம். இதற்குக் காரணம் யாதெனின், சதாகாலமும் உலகாதிகளைப் பற்றிய அறிவு ஆழ்ந்து விரிந்து வளர்ந்து வருதலேயாம். பிரபஞ்சாதிகளை உற்றுநோக்கிப் பிரச்னைகளை யெழுப்பி, அவைகளை ஆராய்ந்து விடுதற்கான முறைகளையும், ஒவ்வொரு முறையிலுமுள்ள பொய்மெய்களையும் குற்றங்களையும் அவ்வவர்களுடைய மனோவமைப்பிற்கும் அறிவு வளர்ச்சிக்கும் அநுபவவுப் பலன்களுக்கும் தக்கவாறு உணர்ந்தறிந்து விரிக்க முடியுமே யல்லாமல், அனைவர்க்கும் தகுதியும் பொருத்தமுமானதும், எவரும் எளிதில் கிரஹித்துத்தொடர்ந்து உயரும்படியானதும் ஆகிய கற்பனைகளையும், உபாயங்களையும் நெறிகளையும் அறிவித்தற்கியலாது. மானுடர்களின் சித்தஅமைப்பும் போக்கும் அநுபவமும் பல திறத்தன. ஆதலின், ஆறறிவுபெற்று விளங்கும் மாந்தர்களி லொவ்வொருவரும், வித்தகர்களைப் போல், அப்பிரச்னைகளால் தூண்டப்பட்டு, அவைகளில் ஈடுபட்டு, அகம்புற ஆராய்ச்சியிற்புகுந்து, அவ்வவர்க்கான முறையைத் தெளிந்து ஏற்று, மேன்மேல் விசாரித்துப் பார்த்து ஓர் உறுதியாய முடிவிற்கு வரவேண்டும். “கைகாட்டி மரம்போல், ஞானவுலகில், முமூக்ஷுக்களுக்கு உதவிபுரிபவர் அவ்வித்தகர்களாம்.”

வித்தகர்களில் ஒவ்வொருவர் வழியும், அநுபவத்திறனும்,ஞானமும் அவர்கள்தோன்றியநாட்டினரின், அல்லது சமூகத்தின் மனப்பாங்கையும், வாழ்க்கைப் போக்கையும், பொது விருப்பங்களையும் இலக்ஷியங்களையும், அவ்விருப்பங்களின்மீது அவர்களுக்குள்ள ஆர்வத்தையும், அவ்விலக்ஷியங்களின் மீதுள்ள சிரத்தையையும்,காலப்போக்கில்வளர்ந்துவரும் கலைகளின் கருத்துக்களையும், கலகம் புரட்சி யுத்தங்கள், மதக் கொள்கைகள், எழிற்கலைகள், பிரகிருதிசாஸ்திரங்கள், அயல் ஜாதியார்களுடன் போக்குவரவு ஏற்படுதல், அந்நிய நாகரிகக் குடியேற்றம், முதலாயினவைகளால் சமூகப்பழக்கவழக்கங்களிலும்நோக்கங்களிலும் உண்டாகும் மாறுதல்களையும் பொறுத்துள்ளன.

ச்ருதியையும் (Revelation), ஸ்மிருதியையும் (Tradition),கர்மத்தையுமேதான் மதங்களெல்லாம் வற்புறுத்துகின்றன. மதக் கோட்பாடுகளைப்பின்பற்றி நடத்தற்கு இன்றியமையாத சாதகம் விசுவாசமாகும். பருப்பொருள்களாலமைந்த இயற்கை யுலகைச் சோதித்து, புற நிகழ்ச்சிகளின் முறையையும் பலாபலன்களையும் கவனித்துக் காரணகாரிய விதிக்குட்படுத்திக் காட்டுவது பிரகிருதிசாஸ்திரம். உலகாதிகளில் உள்ள எழிலை வெளிப்படுத்தி இன்புறச் செய்வன இலளிதவித்தைகளாம்; இவைகளுக்குப் பெருஞ் சாதகமாயிருப்பது கற்பனசக்தியாம். இவைகளின் முடிபாகத் திகழ்வது தத்வ ஞானமாகும். அக் கலைகளின் முடிபுகளையெல்லாம் அங்கீகரித்தபோதிலும், அவைகளைப் போல், ஒரே சாதகத்தையும் ஒரே மார்க்கத்தையும் ஒரே கொள்கையையும் மிகைபடுத்தி வற்புறுத்தாமல், பிரபஞ்சாதிகளனைத்திலும் மனதைச் செலுத்தி, அதிதீர்க்க உள்ளாராய்ச்சியினாலும் புரைதீர்ந்த விசாரிப்பினாலும், சாத்வீக குணவொழுக்கங்களாலும் உள்ளதை உள்ளவாறு அறிவுறுத்திக் காட்டுபவர் தத்துவ ஞானமுடைய வித்தகர். அவர், மேற்காட்டிய கலைகளுக்கும் இப்பிரபஞ்சத்திற்கும் ஜீவாதாரமான மூலவஸ்துவையும் அவைகளின் உள்ளிணக்கத்தையும் மெய்ம்முடிபையும், பிரபஞ்ச இயக்கங்களின் அந்தரங்க நோக்கத்தையும் ஐயந் திரிபற உணர்த்துவார். “வாழ்க்கையாகிய நிலத்தில், நானாவித கலைகளான செடிகள் செழித்து ஓங்கி வளர்ந்து புஷ்பித்துச் சிறக்கும்படி ஒளியைப்பரப்பி, வெப்பத்தை அளித்து, உதவும் சூரியனும் தத்வஞானம்”. மெய்யாய வித்தகத்திற்குச் சாதகமாவன எவையெனின், உவப்பு வெறுப்புக்களற்ற மனோ நேர்மையும், பொறுமையும் ஆய்ந்தோய்ந்து நிதானித்துச் சீர்தூக்கிப் பார்க்கும் குணமும், சர்வசர்ஸ்திரப் பாண்டித்தியமுமே யாம். இவ் வரும் பெருங் குணாதிசயங்களை ஞானிகளெல்லோரும் சமமாகப் பெற்று விளங்காததால், அவர்களுடைய கற்பனைகளுக்குள்பரஸ்பர முரண்பாடுகளும்,வேற்றுமைகளும் காணப்படுகின்றனபோலும்.

இனி, கேவலப் பிரச்னைகளெனவும்(Theoretical problems) அநுஷ்டான விதிகளெனவும் (Practical principles) இருபாகங்களாகப் பிரிக்கப்பட்டுளது தத்வஞானம். கேவல சத்தைப்பற்றி (Pure Being) உணர்த்துவது மூலதத்வமாகும் (Metaphysics). சத்தின் தோற்றங்களை, அதாவது இயற்கை உலகையும் ஜீவராசிகளையும் சோதித்து, அவைகளின் அமைப்பையும் போக்கையும் வெளிப்படுத்து

வன பிரகிருதி சாஸ்திரங்களும் (Physical sciences), சரிதங்களுமாம் (Histories). மனோவமைப்பையும் வளர்ச்சியையும், தொழில்களையும் விளக்குவது உளநூலாகும் (Psychology). ஞானவளர்ச்சியின் வழிகளையும், சக்தியையும், எல்லையையும்பற்றிச் சித்தாந்தப்படுத்துவது ஞானவிளக்க சாஸ்திரமாகும் (Epistemology).

அநுபவப் பிரச்னைகளோவெனில், பலாபலன்களாகிய முடிவை முன்னிட்டுச் செய்யும் பலதிறக் கர்மங்களைப் பற்றியனவாம்; அவைகளுக்கு உட்பட்டன அறநூல்களும் (Ethics), இலளித வித்தைகளும் Arts), மதங்களுமாம்.

இவ்விஷயங்களை இனி விரிப்போம்.

# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

5-ம் பத்து, 10-ம் தசகம்

[719-வது பக்கத் தொடர்ச்சி]

### 6-ம் பாசுரம்.

நின்ற வாறு மிருந்த வாறும்
　　கிடந்த வாறு நினைப்பரியன
வொன்றலா வுருவா
　　யருவாய நின்மாயங்கள்
நின்று நின்று நினைக்கின் றேனுன்னை
　　யெங்ஙன நினைகிற்பன் பாவியேற்
கொன்று நன்குரையா
　　யுல்கமுண்ட வொண்சுடரே

**உரை:**—நினைப்பு அரியன - எவ்வவவு ஆலோசித்தாலும் நினைக்கக்கூடாத, ஒன்றலா உருவாய் - ஒன்று அல்லாமல் பலவிதமான உருவாகிப் பலவித விசித்திர உருவுகளோடு கூடி, அருவாய - மனதில் அமைக்கத் துர்லபமாயிருக்கின்ற ஸூக்ஷ்மங்களாகி மிகவும் நுண்ணிதான, நின்மாயங்கள் - உன்னுடைய பல திவ்விய சேஷ்டைகளை, நின்று நின்று-மெல்லமெல்ல ஒன்றுக்குப் பின் ஒன்றாய் அநேக அவதாரங்களிலும் அவசரங்களிலும் ஏற்பட்டிருக்கும் ஸம்பவங்களையும் நிதானித்து அறிவதற்கு, நின்றவாற்றையும் இருந்தவாற்றையும், கிடந்தவாற்றையும் நினைக்கின்றேன்-மனதால் தெரிந்துகொள்ள யத்தனிக்கின்றேன்.

நின்றவாற்றையும் இருந்தவாற்றையும் கிடந்தவாற்றையும்—இத்தொடர்க்குப் பழைய உரைகாரர்கள் வெகு விதமாய் விகல்பித்து அர்த்தம் கூறியிருப்பதற்குக் கமகம் யாதெனின், பகவானின் மாயங்கள் நினைப்பரியனவென்று இப்பாசுரம் கூறுவதே-அவையாவன - திருப்பதி க்ஷேத்திரத்தில் தேவர்களும் மானிடர்களும் பூஜைசெய்து உய்யுமாறு அர்ச்சாரூபியாய் எழுந்தருளியிருப்பதையும், ஸ்ரீவைகுண்டத்தில் வீராஸனத்தில் வீற்றிருப்பதையும், திருப்பாற் கடலில் பள்ளிகொண்ட படியையும் என்று கொள்ளலாம்.

அல்லது,

நின்ற வாறும் - இராமவதாரத்தில் வாலியைக் கொன்றபிறகு ஜெயலெக்ஷ்மியின் கடாக்ஷ சோபையோடு நின்றபடியும், பர்ணசாலையில்இருஷிகளுக்கும் தேவேந்திரனுக்கும் ஸமயம் கொடுத்துச் சந்திக்கும்போது இருந்த இருப்பையும், ஸமுத்திர ராஜனைத் தனக்கு இலங்கைக்குப் போக வழி விலக்கிக்கொடுப்பதின் நிமித்தம் சமுத்திரக்கரையில் தர்ப்பாஸனத்தில் சரணமடைந்து படுத்திருந்தபடியு மென்றுவது அல்லது.

ஸ்ரீ கிருஷ்ணவதாரத்தில் கோபிமாருடன் ராஸக்கிரீடையில் மண்டலமிட்டுக் கைகோத்துக்கொண்டு நின்றபடியும், அவர்களுடன் யமுனாநதிக் கரையில் மணலில் ஒன்றுகூடி இருந்தபடியும், அவர்களில் ஒருத்தியின் மடியில் தலைசாய்த்து மற்றவர்களின் மடியில் திருக்கரங்களையும் திருப்பாதங்களையும் இட்டு உறங்கினபடியு மென்றுவது அல்லது.

இப்பாசுரத்தை ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் திருவரங்கப்பெருமாள் அரையர் கைத்தாளமிட்டுப் பாடுகிற்கையில் திருச்செவியுற்ற ஸ்ரீ ராமாநுஜ முனி திருவாய் மலர்ந்தருளியபடி, ஸ்ரீ கிருஷ்ண பகவான் சிறுகுழவிப் பருவத்தில் தொட்டிலில் நெடும்போது கிடந்த வேதனையால் தொட்டில் பழுக்களைப் பிடித்துக்கொண்டு நின்றபடியும், கால்வலித்தபிறகு உட்கார்ந்திருந்தபடியும், அதன் பிறகு தலைசாய்த்துக் கிடந்தபடியும், என்றுவது பொருள் கொள்ளலாம்.

எங்ஙனம் நினைக்கிற்பன் - என்ன பிரயாசைப் பட்டாலும் நினைக்க முடியவில்லையே என் செய்வேன்! பாவியேற்கு - வல்வினைகளை இயற்றிய இப்பாவிக்கு, ஒன்று நன்குரையாய் - மனம் வேறுபாடுபடாமலும் சிதையாமலும் ஊர்ஜிதமாயும் அநுபவிக்கச் சக்தனாகும்படி ஒரு உபாயம் நீ காண்பிக்கவேணும். உலகமுண்ட வொண்சுடரே - பிரளயகாலத்தில் ஜகத்துக்களெல்லாம் லயமடையாமல் சூழ்ச்சிசெய்து அவைகளை இடரினின்றும் ரக்ஷித்தவனே - எவ்வண்ணம் உலகத்தை இரக்ஷித்தாயோ அப்படி என் மனதை உடையாமல் மேல்கண்ட ஸம்பவங்களை யெல்லாம் பூரணமாய் அநுபவித்துப் பூர்ண மனோரதனாகும்படி ஸங்கல்பிக்க வேண்டும்.

குறிப்பு:—ஒண்சுடர் என்றால் "பிரகாசமானஒளி" அதாவது வீரியம். தேஜஸு பலம் தைரியம்முதலான பிரஸித்தமான பகவானின் கல்யாண குணங்கள்.

---

### 7-ம் பாசுரம்

ஒண்சுடரோ டிருளுமாய் நின்ற வாறு
　　முண்மையோ டின்மையாய் வந்தென்
கண்கொ ளாவகை நீகரந்
　　தென்னைச் செய்கின்றன
எண்கொள் சிந்தையு ணைகின்றே
　　னென்கரிய மாணிக்கமே யென்கண்கட்குத்
திண்கொள்ள வொருநா
　　ளருளாயுன் றிருவுருவே.

ஒண்சுடரோடு-உன்னைப் பிரியத்தோடு ஆச்ரயிருக்கிறவர்களுக்கு மெய்யனாய்த் தோற்றியும், இருளுமாய்-இவ்வண்ணம் பிரீதியோடு உன்னைக் காணவேண்டுமென்றில்லாமல்ஒருவாறு உன்னைச்சோதிப்பவர்களுக்குக் காண்கைக்கு இல்லாதவனாயும், நின்றவாறும்-இருந்தபடியும், வந்து - என்னுடைய மனதிற்கு மாத்திரம் தெரிவதுபோல் தோற்றி, என்கண் - என்கண்களுக்கு, கொளாவகை-திருஷ்டிக்கப்படாமல், நீ-வடிவழகான நீ, கரந்து-மறைந்து, எண்கொள்-உன் குணங்களை நினைப்பதற்கும் உன்னழகைக் காண்பதற்கும் ஆசைப்படுவதில், மனது சென்ற, என்னைச் செய்கின்றன - என்னைச் செய்யும் விளையாட்டான இடர்பாடுகளால், சிந்தையுள் - மனோபாவத்தில், நைகின்றேன் - வருத்தப்படுகிறேன், என் கரிய மாணிக்கமே - நீல ரத்நம்போன்ற திவ்விய சுந்தரனே! என் கண்களுக்குத் திண்கொள்ள-திருடமாயும் கூச்சமும் சஞ்சலமு மில்லாமல் நான் காணும்படி, ஒரு நாள் - ஒரு நாள், உன் திருவுருவு அருளாய் - உன் திருவுருவை, அனுகிரகிக்க வேணும்.

---

### 8-ம் பாசுரம்.

திருவுருவு கிடந்த வாறுங் கொப்பூழ்
　　செந்தாமரைமேற் றிசைமுகன்
கருவுள் வீற்றிருந்து படைத்திட்ட
　　கருமங்களும்
பொருவி லுன்றனி நாயக மவைகேட்குந்
　　தோறுமென் னெஞ்சு நின்றுகெக்
கருவி சோருங் கண்ணீரென்
　　செய்கே னடியேனே

அவதாரிகை:—இப்பாசுரத்தில் மஹாப் பிரளயத்தின் பிறகு ஜகத்ஸ்ருஷ்டியில் பகவான் பிரளய வெள்ளத்தில் படுத்துக்கிடந்து பிரம்மாவைத் தன் உந்தியில் வளர்த்ததும் அத்தெய்வத்தின் மூலமாய் உலகங்களைப் படைத்ததையும் வளர்த்ததையும் பற்றி அநுஸந்திக்கிறார்.

**உரை:**—திருவுருவு - பகவானுடைய நிஜ ஆதிஸ்வரூபம், கிடந்தவாறும் - ஜலார்னவத்தில் பள்ளியாய் அமர்ந்ததும், கொப்பூழ்ச் செந்தாமரை-உந்தியாகிய தாமரஸ புஷ்பமாகிய, கருவுள் வீற்றிருந்து - கர்ப்பவாஸத்திலிருந்து, திசைமுகன் - பிரம்மா மூலமாய், படைத்திட்ட கருமங்களும் - உலக சிருஷ்டி முதலிய இயற்றியதும், பொருவில் - ஒப்பில்லாத, உன் தனி நாயகமவை - உன்னுடைய பிறரோடு ஒப்பில்லா எஜமானத்வத்தையும் என் நெஞ்சு நினைக்கவே சலனப்பட்டு என் கண்கள் நின்றும் வெள்ளம் அருவிகளாய்ப் பெருகிப்போகின்றன - அடியேன் உனக்குத் தாஸியன் - உன் உத்தரவு அன்றியில் செயல் ஏதுக்கும் அதிகார மற்றவன்.

# காற்று மழை

189164

## Shakespeare—"The Tempest"

அங்கம் 5. களம் 1.

[715-ம் பக்கத் தொடர்ச்சி]

ஏரியல் மீண்டும் வருகின்றது. அதன்பின், கன்ஸாலோ உடன்வர, அலான்ஸோ வெறிகொண்ட அபிநயம் புரிந்தனனாய் வருகின்றான். ஏட்ரியனும் ப்ரான்ஸிஸ்கோவும் உடன்வர, ஸபஸ்ட்டியனும் அன்டோனியோவும் அவ்வாறே பின் வருகின்றனர். வந்தவர்கள்,ப்ராஸ்ப்பீரோ தரையில் வட்டமாகக் கிழித்த கோட்டினுள் எய்தி அங்கு மந்திரத்தால் கட்டுண்டு நிற்கின்றனர். ப்ராஸ்ப்பீரோ அவர்களைப்பார்த்துப்பேசுகின்றான்.

---

**ப்ராஸ்ப்பீரோ:**—நின் மண்டையுள் பொங்கி இப்பொழுது பயனற்றுக் கிடக்கின்ற உன் மூளையை, கம்பீரம் வாய்ந்ததும் தடுமாறும் சித்தத்திற்கு அமைதி அளிக்கவல்லது மாகிய வோர் இன்னிசை செம்மை செய்யட்டும் (1)! நில்லுங்கள் அங்கே, ஏனெனில், நீங்கள் இப்பொழுது மந்திரத்தால் கட்டுண்டிருக்கின்றீர்கள் (2)—தூயோய் கன்ஸாலோ, பெருந்தகாய், எனது கண்கள், நின் கண்கள் காட்டும் பரிவினிற்கு உறவேயாகித் தோழமைத் துளிகளை உதிர்க்கின்றன (3)—மந்திரம் இப்பொழுது விரையக் கரைகின்றது; இருளினை உருக்கி வைகறை இரவினைக் களவுகொள்வதுபோல், எழுகின்ற அவர் அறிவுகள், அவர்தம் தெளிவுடை உணர்வினை மூடியிருக்கும் பேதைமைப் புகையைத் துரத்த ஆரம்பிக்கின்றன (4)—ஓ, நல்லோய், கன்ஸாலோ, எனது உண்மைக் காப்பாளா, நீ தொடருமவன்பால் பிறழாத விசுவாசமுடைய புருடனே! நீ புரிந்த தயைகளுக்குச் சொல்லாலும் செய

அலான்ஸோ - நேப்லஸ் மன்னவன். கன்ஸாலோ - வயோதிகப் பிரபு, நற்குண முடையவன்,ப்ராஸ்ப்பீரோவிற்கு உதவி செய்தவன். ஸபஸ்ட்டியன் - அலான்ஸோவின் தம்பி. அன்டோனியோ - ப்ராஸ்ப்பீரோவின் தம்பி. ஏட்ரியன் ப்ரான்ஸிஸ்கோ - பிரபுக்கள். அலான்ஸோவும் அன்டோனியோவும் ஸபஸ்ட்டியனும் தாம் செய்த தீமைகளின் நினைவினாலும், ஏரியல் இடித்துரைத்த வார்த்தைகளாலும் புத்தி தடுமாறி வெறிகொண்டவர்களாய் வருகின்றனர்.

---

(1) இது அலான்ஸோவைப் பார்த்துச் சொன்னது போலும். உன்மூளைபொங்கிக்கிடக்கின்றது; தடுமாறுகின்ற சித்தத்தை ஆற்றி அமைக்கவல்லது இனிய இசைகளே. அவைதாம் இப்பொழுது உன்சித்தத்தின் நோயைத் தீர்த்துக் குணமாக்கட்டும்—என்பது பொருள்.

(2) தம்மை நோக்கி இவ்வாறு இடித்துரைக்கின்ற ப்ராஸ்ப்பீரோவை எதிர்ப்பதற்கு அவர் துவக்கவும், அப்பொழுது அவர்களுக்கு இது சொல்லவும், நேர்ந்திருக்கலாம்.

(3) நின் கண்கள் கலங்கி அழுவது கண்டு என் கண்களும் கலங்கி நீர்வடிக்கின்றன என்பது பொருள். தோழமைத் துளிகள்-நட்பினால் இருவரும் ஒருமனதாய் வருந்தி அழுகின்ற கண்ணீர்.

(4) மந்திரம்...ஆரம்பிக்கின்றன—இது ப்ராஸ்ப்பீரோ தனக்குள்ளே சொல்லிக்கொண்டது ஆதல் வேண்டும். வைகறை - விடியற்காலம். வைகறையில் சூரியன் உதயமாகும்போது எப்படி இருளானது மெல்ல மெல்ல நீங்கி வெளிச்சம் பரவுகின்றதோ, அப்படியே, (என் மந்திரம் அவிழ்கின்றதாதலின்) அவர்களது அறிவு உதித்து அவர் இப்பொழுது கொண்டிருக்கும் மருட்சியை ஓட்டிவிடுகின்றது—என்பது பொருள். புகை - புகையானது ஒன்றினை மூடி மழுங்கச்செய்வதுபோல், மருட்சி அவர்களது உணர்வினை மூடி மழுங்கச்செய்திருக்கிறது.

(5) மறுபடி கன்ஸாலோவைப் பாராட்டுகின்றான். உண்மைக் காப்பாளா—என்தம்பியும் அலான்ஸோவும் ஒன்றுசேர்ந்து என்னைச் சதிசெய்து கடல்மீது போக்கியபோது, அப்படகில், ஆடை உணவு என் புத்தகங்கள் முதலியவைகளை இரகசியமாக வைத்திருந்து என்னை அக்கால் காப்பாற்றினவனே. நீ தொடரும் அவன்-அலான்ஸோ; அன்டோனியோவும் ஸபஸ்ட்டியனும் அன்று அத்தீவில் அலான்ஸோவைக் கொல்லமுயன்றபோது கன்ஸாலோ மன்னனை எழுப்பிக் காத்ததைக் குறிக்கின்றது இது.

லானும் சாலக் கைம்மாறு செலுத்துவேன் (5)—அலான்ஸோ, எனக்கும் என் புதல்விக்கும் நீ மிகவும் கொடுமை செய்தனை. அக்காரியத்தை மேலுற நடத்தினான் உன்தம்பி—அதற்காக இப்பொழுது நீ கிள்ள லுறுகின்றாய், ஸபஸ்ட்டியன் (6)—ஊனும் உதிரமும்,ஏ, என் தம்பி, பேரவாவை வரவேற்று இரக்கத்தையும் இயற்கையையும் வெளியகற்றினாய் (7); ஸபஸ்ட்டியனோடு சேர்ந்து, (ஆதலின் அவன் உள்ளக்கிள்ளல் மிகவும் வலியுடைத்து) உன் அரசனைக் கொன்றிருப்பாய்; இயற்கையற்றவன் நீ ஆயினும் நின்னை யான் மன்னித்துவிடுகின்றேன். இவர்களுடைய அறிவு பெருகத் தலைப்படுகின்றது, நெருங்குகின்ற இந்த அலை, இப்பொழுது அழுகிக் குழம்பிக் கிடக்கும் உணர்வின் கரையை நிறைத்துவிடும் (8). அவர்களில் ஒருவரேனும் என்னை இன்னும் கண்ணுறவும் இல்லை, என்னைத் தெரிந்துகொள்ளவும் இல்லை—ஏரியல், என் குகையில் இருக்கின்ற தலைப்பாகையையும் உடைவாளையும் கொண்டுவா—[ஏரியல் போகின்றது]இவ்வுறையினின்று கழன்று யான், ஒரு நாள் மிலானாகி இருந்தவாறே என்னைக் காட்டித்தருகின்றேன் (9)—விரைக ஆவியே, காலம் அதிகம் கழியா முன்னம் நீ விடுதலை அடைவாய்.

[ஏரியல் திரும்பி வந்து, ப்ராஸ்ப்பீரோ வேறு ஆடைகள் உடுப்பதில் உதவியவண்ணம் பாடுகின்றது.]

**ஏரியல்:**—

யாவயி னுறியுந் தும்பி
அவ்வயி னுறிவென் யானும்
பூவினற் கிண்ணத் தூடு
புரிந்துநான் தங்க லாவேன்
கூவுமே லாந்தை யானே
அங்ஙனே பதுங்கிக் கொள்வேன்
வாவலின் முதுகி லேறி
வேனிற்பின் களித்துச் செல்வேன்
கிளைகளிற் றொங்கு மலர்களி னகவயின்
களிமிகக் களிமிக வாழ்குவன் நானே. (10)

**ப்ராஸ்ப்பீரோ:**—ஆகா, இதுவன்றோ என் மதுர ஏரியல் (11)! நீயின்றிக் குறைகூர்வேன் யான் (12); எனினும் உன் விடுதலையை நீ அடையக்கடவாய்—ஆம்,ஆம்,ஆம் (13)—கண்ணிற்குப் புலப்படாமல் நீ யிருக்கும் வண்ணமே அரசனுடைய கப்பலுக்குச் செல்; அங்கு நாவாயாட்கள் கப்பலின் அடிப் பாகத்தில் துயில்கொண்டிருக்கக் காண்பாய்; மீகாமனும் இதையாளனும் விழித்திருப்ப, அவர்களை இங்கு வற்புறுத்தி உடனே கொண்டுவா (14).

**ஏரியல்:**—என் எதிரே காற்றைக் குடித்து, நின் நாடி இருமுறை அடிப்பதன்முன் திரும்புவேன்.

[ஏரியல் போகின்றது]

**கன்ஸாலோ:**—எல்லாத் துன்பமும் துயரமும் வியப்பும் விந்தையும் இங்குக் குடிகொண்டிருக்கின்றது: விண்ணுறைதெய்வந்தான் ஏதேனும் நம்மை வெருவரும் இத்தேயத்தினின்று காத்தழைத்தேகல்வேண்டும் (15).

**ப்ரரஸ்ப்பீரோ:**—ஐய அரசனே, பார் இதோ, பொல்லாங்கு புரியப்பெற்ற மிலானின் தலைவன் ப்ராஸ்ப்பீரோ. மன்னிய உயிருடை ஓர் மன்னனே நின்னுடன் இப்பொழுது பேசுகின்றானென்பது பின்னும் நிச்சயமாம்படி உனது உடலினைத் தழுவிக் கொள்கின்றேன். நினக்கும்நின்னுடனிருப்போர்க்கும் இதயமுற நல்வரவு கூறுகின்றேன். (16)

(6) கிள்ளல் உறுதல் - மனச்சாக்ஷி உறுத்துதல்.

(7) ஊனும் உதிரமும் - என் தம்பியாகி என்னுடன் இரத்தசம்பந்தம் உடைய நீ—என்பது குறிப்பு.

பேரவா...அகற்றினாய்—என் பதவியைக் கைப்பற்ற வேண்டும் என்னும் பேராசை கொண்டு, தம்பி என்னும் இயற்கையும், பிறரை வருத்தலாகாது என்னும் இரக்கத்தையும் கைவிட்டாய்—என்பது பொருள்.

(8) இப்பொழுதுதான் இவர் தம் உணர்வைப் பெறத் தலைப்படுகின்றனர். இதன்மேல் நான் சொல்வது இவர்களுக்கு விளங்கவரும்—என்பது பொருள். அறிவு ஒரு ஆறாக உருவகம் செய்யப்பட்டிருக்கின்றது. அது பெருக, உணர்வென்னும் கரையில் உள்ள குழப்பத்தைக் கழுவி அவர் சித்தத்தெளிவு அடைவார்—என்று ப்ராஸ்ப்பீரோ தனக்குள்ளே சொல்லிக்கொள்கின்றான்.

(9) தான் மந்திர அங்கி முதலியவேறுஉடைகள் அணிந்திருந்ததால் தன்னை அவர்கள் அடையாளம் தெரிந்து கொள்ளவில்லை என்றுமதித்து, முன் மிலானுக்குத்தலைவனாக இருந்தபோது தரித்திருந்ததலைப்பாகை உடைவாள் முதலியவைகளை அணிந்துகொண்டால் அவர் தெரிந்து கொள்ளலாம் என்று எண்ணுகின்றான்.

உறையினின்று கழன்று - இப்பொழுது அணிந்திருக்கும் அங்கி முதலியவைகளைக் கழற்றிவிட்டு.

ஒருநாள் நான் மிலானாகி இருந்தவாறே-பன்னிரண்டு வருடங்களுக்குமுன்நான் மிலானுக்குத் தலைவனாக இருந்தபோது எவ்வகை உடைகள் அணிந்திருந்தேனோ அவைகளை அணிந்து.

(10) வண்டுகள்எங்கிருந்துதேனை உறிந்து பருகுமோ அங்கிருந்து நானும் தேனை உறிந்து உண்டு, கிண்ணம் போன்ற மலர்களில் இனிது தங்குவேன். அப்பொழுது, ஆந்தைகள் அலறுமானால் நான் அப்பூவினுள்ளேயே பதுங்கி ஒளிந்துகொள்வேன். வேனிற்காலம் நீங்குமானால், நான் இவ்விடம் இருக்காமல், அவ் வேனிற்காலம் எங்கெங்குப் போகின்றதோ அங்கெல்லாம், நானும் வௌவாலின் முதுகில் ஏறிப் பறந்து தொடர்ந்து செல்வேன். மலர்கள் நிறைந்த வேனிற்காலமில்லாதவிடத்து யானும் இருக்கலாற்றேன்.மிக்க களிப்புடன் எப்பொழுதும் நான் இனி மலர்களுக்குள்ளேயே வசித்து வாழலாவேன்—என்பது பொருள்—விடுதலை யடைந்த வாழ்க்கையைத் தான் இனி எவ்வண்ணம் கழிக்கநினைத்திருக்கின்றதென்பதை ஏரியல் இதனால் தெரிவிக்கின்றது.

(11) ஏரியலின் பாட்டைக் குறித்தேனும், அல்லது அவ்வேரியல் அவனுடையஆடைகளை அணிவிக்கும்மென்மையைக் குறித்தேனும், 'மதுர ஏரியல்' என்று பாராட்டுகின்றானெனக் கொள்ளலாம்.

(12) உன்னை விட்டுப் பிரிந்தபின் நீ இல்லாத குறை எப்பொழுதும் என் மனத்தில் இருக்கும்—என்பது பொருள்.

(13) ஆம், ஆம்,ஆம் ஆடைகள் செவ்விதின் அணிந்து முடிந்தன, என்பதைக் குறிக்கும்.

(14) நாவாய் ஆள்கள் - கப்பலில் வேலைசெய்யும் ஆள்கள். மீகாமன் - கப்பலோட்டும் அதிகாரி. இதையாளன் - கப்பலின் பாய்களை இறக்குவது திருப்புவது போன்ற காரியங்களை மிகாமனுக்கு உட்பட்டுச் செய்பவன்.

(15) எல்லாம் இங்குப் பயங்கரமாயிருக்கின்றது. அச்சத்திற்கு இடமான இந்தத் தீவிலிருந்து தெய்வந்தான் நம்மைக் காப்பாற்றி அழைத்தேக வேண்டும்—என்பது பொருள்.

(16) இது அலான்ஸோவைப் பார்த்துச் சொல்வது. உங்களால் தீமை செய்யப்பட்ட மிலானின் தலைவனாகிய ப்ராஸ்ப்பீரோவாகிய என்னைப் பார்—நான் இறந்துவிட்டேன் என்று நீ எண்ணியிருப்பாயாதலின் இப்பொழுது உன்முன் தோன்றும் நான், பேயோ யாதோ என்று அயிர்ப்பாய்; நான் உயிருள்ள மனிதனே என்பதை நிச்சயம் செய்வதற்கு இப்பொழுது உன் உடலைத் தழுவிக் கொள்கிறேன்—என்பது பொருள்.



# தமிழ்ப்பாடம் 90.

## அஷ்ட பிரபந்தம்—திருவரங்கத்தந்தாதி

[717-வது பக்கத் தொடர்ச்சி]

திருவரங்கத்து மாலையிலிருந்து பதினாறு செய்யுள்கள் தேர்ந்தெடுத்துப் படித்தோம். இனித் திருவரங்கத்து அந்தாதிச் செய்யுள்கள் சில கற்கலாம்.

திருவரங்கத்தந்தாதி என்பது திருஅரங்கத்து அந்த ஆதி எனப் பிரியும். திருவரங்கத்தைப் பற்றிப்பாடிய அந்தாதி என்பது அதன் பொருள். அந்தாதி என்பது ஒருவகைப் பிரபந்தம். அந்தத்தை ஆதியாக உடையது, அதாவது முடிவை முதலாக உடையது என்று அது பொருள்படும். ஒரு செய்யுளின் முடிவில் இருக்கின்ற சொல்லேனும், அல்லது சில எழுத்துக்களேனும் அதற்கு அடுத்த செய்யுளின் முதலாக அமையும்படி எல்லாச்செய்யுள்களும் இந்தப் பிரபந்தத்தில் தொடருமாகையால் இந்நூலிற்கு அந்தாதி எனும் பெயர் வந்தது.

இந்நூலில் செய்யுள்கள் அந்தாதியாகத் தொடர்வதுமன்றி, ஒவ்வொரு செய்யுளிலும் யமகம் அல்லது மடக்கு என்னுஞ் சொல்லணி அமைந்திருக்கின்றது. முன் (6 வது வால்யூம், 513, 528 வது பக்கங்களில்) திரிபு, யமகம் என்னும் சொல்லணிகளின் தன்மை கூறப்பட்டிருக்கின்றது. அதனை நினைவுசெய்து கொள்ளவும். திருவேங்கடமாலையில் ஒவ்வொரு செய்யுளிலும் பெரும்பான்மை திரிபும்,சிறுபான்மை யமகமும் பின் இரண்டு அடிகளிலேயே கண்டோம். இந்தத் திருவரங்கத்தந்தாதிச் செய்யுள்கள் எல்லாம் நாலடியும் யமகத்துடனே நடக்கின்றன. வந்த எழுத்துத் தொடரே மீண்டும்மீண்டும் வந்து வேறு வேறு பொருளைப் பொருந்தத்தரும்படிஅமைந்துள இப்பிரபந்தத்தின் செய்யுள்களிற் சிற்சில கற்று மனப்பாடம் செய்துகொள்ளல் தமிழைப் பயில்வதற்கு நல்லதோர் உதவியாகும்.

இந்தச் செய்யுள்கள் கட்டளைக் கலித்துறை என்னும் வகையைச் சேர்ந்தன. திருவரங்கத்து மாலைச் செய்யுள்களைப் போலவே இந்நூலிலுள்ள செய்யுள்களும் அடி ஒவ்வொன்றும் மெய் யெழுத்துக்கள் தவிர மற்றஎழுத்துக்கள் பதினாறு அல்லது பதினேழு கொண்டிருக்கும்.

---

திருவரங் காவுறை மார்பா திசைமுகன்
சேவிப்பக்கந்
திருவரங் காதரித் தின்னிசை பாடத்
திருக்கண்வளர்
திருவரங் காவுன் பழவடி யேற்கருள்
செய்யவெழுந்
திருவரங் காதலித் தேனுனக் கேதொண்டு
செய்வதற்கே. 1

**பதப்பிரிவு:**—திரு அரங்கு ஆ உறை மார்பா திசைமுகன் சேவிப்ப கந்திருவர் அங்கு ஆதரித்து இன் இசை பாட திரு கண்வளர் திரு அரங்கா உன் பழ அடியேற்கு அருள் செய்ய எழுந்திரு வரம் காதலித்தேன் உனக்கே தொண்டு செய்வதற்கே.

**பதவுரை**

திரு - இலக்குமி, அரங்கு ஆ - தான் வசிக்கும் இடம்ஆக, உறை-தங்கியிருக்கின்ற, மார்பா-மார்பை உடையவனே; திசைமுகன் - பிரம்மன், சேவிப்ப - சேவிக்கவும்; கந்திருவர்-கந்தர்வர்கள், அங்கு - உன் அருகே, ஆதரித்து-விரும்பி, இன் - இனிய, இசை - கீதங்களை, பாட - பாடவும்; திருக் கண்வளர்-அழகிய நித்திரை செய்கின்ற, திருவரங்கா - திருவரங்க நாதனே; உன் - உன்னுடைய, பழ - பழமையான, அடியேற்கு - அடியேனுக்கு, அருள் செய்ய-அருள் செய்யும் பொருட்டு, எழுந்திரு-எழுந்திருப்பாயாக; உனக்கே - உனக்கே, தொண்டு செய்ய - யான் பணிவிடைசெய்யும்படி, வரம்-வரம்பெற, காதலித்தேன்-விரும்புகின்றேன்.

**விளக்கம்:**—நாலடியிலும் முதலில் 'திருவரங்கா' என்னும் எழுத்துக்கள் யமகமாக வந்திருக்கின்றன. முதலடியில்அவை, திரு அரங்கு ஆ, எனப்பிரிந்தன. ஆ, என்பது ஆக என்னுஞ் சொல்லின் க என்னும் எழுத்துக் கெட்டு நிற்கின்றதாகும். நளவெண்பாவின் "நாற்குணமும் நாற்படையா, ஐம்புலனும் நல்லமைச்சா" என்ற செய்யுளில் இவ்வாறு ஆக என்பது ஆ என விகாரப்படக்கூடுமென்பதை முன் (5வது வால்—143-வது பக்கம்) சொல்லியிருக்கின்றோம். உறை மார்பா என்னுந்தொடர், உறைகின்ற மார்பா என விரியுமாகையால் வினைத்தொகை.

இரண்டாவது அடியிலுள்ள திருவரங்காஎன்னும் எழுத்துக்களில்,திருவர்என்னும் எழுத்துக்கள், முதலடியின் கடைசியிலுள்ள கந் என்பதோடே சேர்ந்து கந்திருவர் என்றசொல் ஆகின்றன. கந்திருவர் + அங்கு ஆதரித்து—எனப்பிரியும். ர் என்னும் மெய்யின்மேல், வருமொழி முதலிலுள்ள அ என்னும் உயிர் ஏறி ர என ஆயிற்று.

மூன்றாவதடியில் திருவரங்கா, என்னும் எழுத்துக்கள், திரு அரங்கா, என்று விளிக்கின்ற இயற்கையான பொருளைத் தரும் சொற்கள் ஆயின. திரு + அரங்கா, என்பதில், நிலைமொழி ஈற்றில் உ என்னும் உயிர் இருக்க வருமொழி முதலிலும் உயிர்வந்ததால் வ் என்னும் மெய்தோன்றி, அதன்மேல் வருமொழி முதல் உயிராகிய அகரம் ஏறி, திரு வ் + அரங்கா—திருவரங்கா என்று ஆக நேர்ந்தது.

நான்காவது அடியில், திருவரங்கா என்னுமெழுத்துக்களில், திரு என்னும் எழுத்துக்கள், எழுந்திரு என்று ஆவதற்காக மூன்றாமடிக் கடைசி எழுந் என்னும் எழுத்துக்களோடு சேரும்—எழுந்திரு வரம் காதலித்தேன். வரம் என்று, மற்ற எழுத்துக்களில் மூன்று சேர்ந்து ஒரு சொல் ஆயின. கா, என்பது, காதலித்தேன் என்ற அதற்கடுத்த பதத்தின் முதலெழுத்தாய் நிற்கின்றது.

**விரிவுரை:**—பிள்ளைபெருமாள் ஐயங்கார், திருவரங்கர் துயில்நீத்து எழுந்தபின் ஓர் வரம் கேட்கவேண்டுமென்று நெடுங்காலம் காத்திருந்தும், கந்தருவர் பாடும் இன்னிசையினிடையே துயிலெழாமல் அவர் உறங்கக்கண்டு பொறுமையிழந்து தாம், அவரை எழுப்பத் துணிந்துவிடுகின்றார். இப்படி எழுப்பி மிக விரைவில் கேட்டுப் பெறவேண்டிய வரம்தான் யாதோவென்றால், வேறொன்றுமில்லை, திருவரங்கருக்கே

தான் எந்நாளும் தொண்டனாக இருக்கவேண்டுமென்பது. பக்தர்கள் கேட்கவல்ல வரம் இதுதான்; இது தான் அவர்களுக்குக் கேட்கவுந் தெரியும்.

---

செய்ய வளைக்குரு வின்னரு ளாற்றிருத்
தாள்வணங்கிச்
செய்ய வளைக்குலஞ் சூழரங் கேசன்
சிறிதமுது
செய்ய வளைக்கும் புவிக்குமங் காந்தசெவ்
வாய்முகுந்தன்
செய்ய வளைக்கும் சிலம்பணி பாதங்கள்
சேர்ந்தனமே. 2

பதபபிரிவு:— செய்யவளை குருவின் அருளால் திரு தாள் வணங்கி செய்ய வளை குலம் சூழ் அரங்க ஈசன் சிறிது அமுது செய்ய அளைக்கும் புவிக்கும் அங்காந்த செம் வாய் முகுந்தன் செய்ய வளைக்கும் சிலம்பு அணி பாதங்கள் சேர்ந்தனம் ஏ.

பதவுரை.

செய்யவளை - இலக்குமியை, குருவின் - ஆசாரியரது, அருளால் - கிருபையினால், திரு - அழகிய, தாள் - பாதங்களை, வணங்கி - தொழுது; செய்ய - வயல்களிலுள்ளனவான, வளை - சங்கினது, குலம் - கூட்டங்கள், சூழ் - சூழ்ந்த, அரங்க ஈசன் - அரங்கத்தில் இருக்கும் நாதனும்; சிறிது அமுது செய்ய - சிற்றுண்டியாக அருந்தும்பொருட்டு, அளைக்கும் - வெண்ணெய்க்கும், புவிக்கும் - உலகத்திற்கும், அங்காந்த - திறந்த, செம் - சிவந்த, வாய் - வாயையுடைய, முகுந்தன் - முகுந்தனும் ஆன திருமாலின், செய்ய - செம்மையுடையதாய், வளைக்கும் - வளைந்துள்ள, சிலம்பு - சிலம்புகளை, அணி - அணிந்த, பாதங்கள் - பாதங்களை, சேர்ந்தனம் - அடைந்தோம்.

கருத்து:—ஆசாரியனது அருளால் திருமகளைத் தொழுது, அவள் மூலமாகத் திருமாலின் பாதங்களை யடைந்தோம், என்பது இச்செய்யுளின் பொருள்.

விளக்கம்:—செய்யவளைக்கு, என்னும் எழுத்துக்கள் நாலடியிலுந் தொடர்ந்து யமகமாக வந்திருக்கின்றன:—

முதலடியில்—செய்யவள், என்பது முதல் பதம், செந்நிறமுடையவள், எனப் பொருள்பட்டுத் திருமகளைக் குறிக்கும் அப்பதம் இரண்டாம் வேற்றுமை அடைந்து, செய்யவளை என ஆயிற்று. அதற்குப் பின் வரும் கு என்னும் யமகவெழுத்து, குரு என ஆகின்ற சொல்லின் முதல் எழுத்து.

இரண்டாவது அடியில்—முதல் பதம் 'செய்ய' என்பது. செய், என்பது பெயர்ச்சொல்லாயின் அதற்கு வயல் என்பது பொருள். செய்அ - செய்ய, என அதனோடு அ, என்னும் விகுதி சேர்ந்து குறிப்புப்பெயரெச்சமாகி வயலிலிருப்பதான என்று பொருள்பட்டது. அடுத்த பதம், வளை - சங்கு. பின் வந்த கு என்னுமெழுத்துக் குலம் என்று தொடர்கின்ற சொல்லிற்கு முதல் ஆயிற்று.

மூன்றுமடியில்—செய்ய, என்னும் முதல் பதம் செய்வதற்கு என்னும் பொருளுடைய வினையெச்சம். அதற்கு அடுத்த பதம், அளை. இதற்கு வெண்ணெய் என்பது அர்த்தம். அது நான்காம் வேற்றுமை பெற்று, அளைக்கு என ஆயிற்று. செய்ய + அளைக்கு, என்று சேரும்போது, வ் என்னும் மெய் வந்து செய்யவளைக்கு என ஆகும்.

நான்காம் அடியில்—முதல் பதம், செய்ய. இது செம்மை என்ற பெயர்ச்சொல் அடியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம். அடுத்தபதம், வளைக்கும் என்னும் தெரிநிலைப் பெயரெச்சம்.

குறிப்பு:—முன்பாட்டின் கடைசி, செய்வதற்கே என நிற்க, இப்பாட்டு அதில் வந்துள செய் என்னும் எழுத்துக்களை முதலாகப் பெற்றுச் செய்யவளைஎன ஆரம்பிப்பதால், இவை அந்தாதிச் செய்யுள்கள் ஆகின்றன.

---

### இலக்கணம்

(1) நிலைமொழி யிறுதியில் இ ஈ ஐ என்னும் உயிர்களில் ஒன்று இருக்க, வருமொழி முதல் உயிர் எதுவானாலும் அவையிரண்டும் சேரும்பொருட்டு ய் என்னும் மெய் இடையில் வரும் என்பதைக் கூறினோம்:-

மொழி + இறுதி - மொழியிறுதி. தீ + அவிந்தது - தீ யவிந்தது. ஆசை + உண்டு - ஆசையுண்டு.

(2) நிலைமொழி யிறுதியில், அ ஆ ஊ ஒ ஓ ஔ, என்னும் உயிர்களில் ஒன்றிருக்க, வருமொழி முதல் எந்த உயிர்வந்தாலும் இடையில் வ் என்னும் மெய் அவைகளைச் சேர்ப்பதற்காக வரும் என்பதையும் சொன்னோம்:-செய்ய + இல்லை-செய்யவில்லை. சொல்லா + ஓடினான்-சொல்லாவோடினான். பூ + அலர்ந்தது. பூவலர்ந்தது. போ + என்றான் - போவென்றான், முதலியன.

III. இதுவரையில் சொல்லப்படாத எழுத்துக்கள் உ எ ஏ என்பன. உ என்னும் எழுத்திற்குச்சிறப்பாக வேறு விதி யிருத்தலால், அதனைப் பின்னர்ப் பார்ப்போம். எ என்னும் எழுத்து, தானே வினா இடைச்சொல்லாகி நிலைமொழியாய் நிற்பதன்றி மெய்யோடு சேர்ந்து மொழிக்கிறுதியில் வராது. ஆகையால் அதனை விட்டுவிடலாம். எனவே, எஞ்சிநிற்கும் எழுத்து ஏ. இது நிலைமொழியிறுதியில் இருக்குமாயின், வருமொழிமுதல் உயிரோடு புணரும்போது என்ன ஆகும் என்பதைப் பார்ப்போம்.

ஏ ன்பது, வேறு, சொற்களோடு சேர்ந்து, வினா தேற்றம் பிரிநிலை எண் முதலிய பொருள்களைத் தரும்போது, (வால்யூம் 5. பக்கம் 425, 443) இடைச்சொல்லாகும்? மற்றுத் தானே, அம்புஎன்று பொருள் படும்போது, பெயர்ச்சொல்லாகும். அல்லாமலும், இது மெய்யெழுத்தோடு சேர்ந்துஉயிர்மெய்ஓரெழுத்தொருமொழியாகலாம்—சே-எருது, தே-கடவுள், பே-நுரை, ஆகிய இவை, ஏ என்னும் உயிரோடுசேர்ந்த உயிர்மெய்யெழுத்துக்கள், பொருளுடைய ஓரெழுத்தொருமொழிகள் ஆகின்றன. எனின்,

i. நிலைமொழி ஏ, இடைச்சொல்லா யிருக்குமாயின், வருமொழிமுதலில் வந்த உயிர் எதுவானாலும், இடையிலே ய் என்னும் மெய் வந்து, அம்மெய்யின் மேல் வருமொழிமுதலிலுள்ள உயிர் ஏறும்:—

உதாரணம்—

அவனே + இவன் = அவனே + ய் + இவன் = அவனேயிவன். போயிற்றே + உயிர் = போயிற்றேயுயிர். மகனே + இதுகாண் = மகனே யிதுகாண்.

ii. நிலைமொழி, ஏ, அம்புஎன்னும் அர்த்தமுடைய ஓரெழுத்தொருமொழியாயின், வருமொழி முதலில்



வந்த உயிர் எதுவானாலும், இடையில் வ் என்னும் மெய்வர அம் மெய்யின்மேல் வருமொழிமுதலுயிர் ஏறும். உதாரணம்—ஏ + ஏவினான் = ஏ வ் + ஏவினான் = ஏ வேவினான். ஏ + எங்கே = ஏவெங்கே. ஏ + இறுத்தான் = ஏ விறுத்தான்; ஏ + இலங்கு சிலை = ஏவிலங்கு சிலை.

iii நிலைமொழி, ஏ என்னும் எழுத்தோடு சேர்ந்த உயிர்மெய் ஓரெழுத்தொருமொழியாயின், வருமொழிமுதலுயிர் எவ்வெழுத்தாயினும்இடையில் வ் என்னும் மெய் வர, வருமொழிமுதலுயிர் அம்மெய்யின் மேல் ஏறும்.

சே + ஓட்டினான் = சேவ் + ஓட்டினான் - சேவோட்டினான். தே + உலகம் = தேவுலகம், முதலியன.

சே, என்றது எருது என்னும் பொருளில் ஓரெழுத்தொருமொழி யாகும்போது, வ் என்னும் மெய் வந்தது. ஆனால், செம்மை என்ற சொல் சில சமயம் விகாரப்பட்டுச் சே என்று நிற்பதுண்டு. அப்படி நின்ற சே, என்பதோடு வருமொழி முதலில் உயிர்புணரும்போது, ய் என்னும் மெய்யேனும், வ் என்னும் மெய்யேனும் வரலாம்:—உதாரணம்—

செம்மை + அடி = சே + அடி = சே ய் + அடி = சேயடி; அல்லது, சே வ் + அடி = சேவடி.

---

# கலித்தொகை

[721-வது பக்கத் தொடர்ச்சி]

### பாலைக்கலி 29.

இளவேனிற் காலத்தில் வந்துவிடுவதாகச் சொல்லிப் பொருள்தேடச் சென்ற தலைவன் அப்பருவம் வந்தும் வரவில்லை. அதனால் தலைவி பெரிதும்வருந்தி, "நம்மிடத்தில் தலைவர்க்கு அன்பு இல்லாதிருந்தாலும், இக்கால வரவினை அவர்க்குச் சொல்லுபவர் யாராவது இருப்பாரானால், முன்பு தாம் பரத்தையரோடு விளையாடிய விளையாட்டுக்களை நினைத்துக் கொண்டு வந்துவிடுவார்" என்று தோழியினிடத்திற் கூறினாள். அதனைக் கேட்டுக்கொண்டிருந்த பாணன் போர்க்களத்திலுள்ளபாசறையை அடைந்து தலைவனை நோக்கிக் கூறியதைக் கூறுவது இச்செய்யுள்.

---

அருந்தவ மாற்றியார் நுகர்ச்சிபோ லணிகொள
விரிந்தானாச் சினைதொறூஉம் வேண்டுந்தா தமர்ந்தாடிப்
புரிந்தார்க்கும் வண்டொடு புலம்புதீர்ந் தெவ்வாயு
மிருந்தும்பி யிறைகொள வெதிரிய வேனிலான்

துயிலின்றி யாநீந்தத் தொழுவையம் புனலாடி
மயிலியலார் மருவுண்டு மறந்தமைகு வான்மன்னோ
வெயிலொளி யறியாத விரிமலர்த் தண்காவிற்
குயிலாலும் பொழுதெனக் கூறுந ருளராயின்

பானாள்யாம்படர்கூரப்பணையெழிலணைமென்றோள்
மானோக்கி னவரோடு மறந்தமைகு வான்மன்னோ
வானாச்சீர்க் கூடலு ளரும்பவிழ் நறுமுல்லைத்
தேனார்க்கும் பொழுதெனத்தெளிக்குந ருளராயின்

உறலியா மொளிவாட வுயர்ந்தவன் விழவினுள்
விறலிழை யவரோடு விளையாடு வான்மன்னோ
பெறலரும் பொழுதோடு பிறங்கிணர்த் துருத்திசூழ்ந்
தறல்வாரும் வையையென் றறையுந ருளராயின்

எனவாங்கு

துணியாநோ யுழந்தானாத் தகையவ டகைபெற
வணிகிளர் நெடுந்திண்டே ரயர்மதி பணிபுநின்
காமர் கழலடி சேரா
நாமஞ்சா றெவ்வரி னடுங்கினள் பெரிதே

(தரவு)

(வரி, 1-4) அருந்தவம் ஆற்றியார் - முற்பிறப்பிற் செய்தற்கு அருமையாகிய தவத்தைச் செய்தவர்கள், நுகர்ச்சி போல் - (அந்தத் தவத்தாற் பெறக்கூடிய பயனை மறுபிறப்பில்) அனுபவிப்பதுபோல, அணி கொள - அழகுபெற, விரிந்து ஆனா சினைதொறூஉம் - அரும்புகள் விரிந்து நீங்காத கொம்புகள் தோறும், வேண்டும் தாது அமர்ந்து ஆடி - தாம் விரும்பும் மகரந்தப் பொடிகளைப் பொருந்தியுண்டு, புரிந்து ஆர்க்கும்-விரும்பி ஒலி செய்கின்ற, வண்டொடு - வண்டுகளோடு, இருந்தும்பி - கரிய தும்பிகளும், புலம்பு தீர்ந்து - வருத்தம் நீங்கி, எவ்வாயும் இறை கொள - எவ்விடமும் தங்குதல் கொள்ளும்படி, எதிரிய- (மரங்கள் அவற்றை) எதிர்கொண்ட, வேனிலான் - இளவேனிற் காலத்தில்.

(தாழிசை)

(வரி 5-8) வெயில்ஒளி அறியாத-வெயிலினது ஒளியைக் கண்டறியாத, விரிமலர் தண் காவில் - விரிந்த மலர்களையுடைய குளிர்ச்சி பொருந்திய சோலைகளிலே, குயில் ஆலும் பொழுது என - குயில்கள் கூவும் காலம் (இக்காலம்) என்று, கூறுநர் உளராயின் - (தலைவற்கு) எடுத்துச் சொல்லுபவர் இருப்பாரானால், துயில் இன்றி - தூக்கம் இல்லாமல், யாம் நீந்த-நாம் (பிரிந்தார்க்குப் பெருந்துன்பத்தைச் செய்கின்ற யாமமாகிய கடலை) நீந்த, தொழுவை அம்புனல் ஆடி - மடுக்களிலுள்ள அழகிய நீரில்ஆடி, மயில் இயலார் - மயில் போலும் சாயலையுடைய பரத்தையர், மருவு உண்டு - சேர்க்கையை அனுபவித்து, மறந்து அமைகுவான் - அவன் நம்மை மறந்து அவரிடத்தில் தங்கி இருப்பான்,

'மன்' என்பது அவ்வாறு கூறுநர் இலர்; உளராயினும் நமக்கு அதனாற் பயனின்று என்பது படநின்றது. ஓ - அசை.

(வரி.9-12) ஆனா சீர் கூடல்-நீங்காத சிறப்பினையுடைய மதுரைமா நகரில், அரும்பு அவிழ் நறுமுல்லை - அரும்புகள் கட்டுவிடுகின்ற வாசனை பொருந்திய முல்லைப் பூக்களில், தேன் ஆர்க்கும்பொழுது என - வண்டுகள் ஒலிக்கும் காலம்(இக்காலம்)என்று, தெளிக்குநர் உளர் ஆயின் (1) - அவற்குத் தெரிவிப்பார் இருப்பாரானால், பால் நாள் யாம் படர் கூர- நடு யாமத்தில் நாம் துன்பம் மிக, பணை எழில் அணை மென்தோள் - மூங்கிலின் அழகினைக் கொண்ட பஞ்சணை போலும் மென்மையாகிய மூலைகளையுடைய, மான் நோக்கினவரோடு - மானினது பார்வை போன்ற பார்வையினையுடைய பரத்தையருடனே கூடி, மறந்து அமைகுவான்-அவன் நம்மை மறந்து அவரிடத்தில் தங்கி இருப்பான்,

'காமம் வித்துபு விளைக்கும்...யாமம்' (பரிபா-5) ஆகலின், 'பால் நாள் படர்கூர' என்றான்.

(வரி 13-16) பெறல் அரும் பொழுதொடு-பெறுதற்கு அருமையாகிய இளவேனிற்காலத்தால், பிறங்கு இணர்

- விளங்குகின்ற பூங்கொத்துக்களையுடைய, துருத்தி சூழ்ந்து - ஆற்றிடைக் குறையைச் சூழ்ந்து, வையை அறல் வாரும் - வையை நதி அறல் உண்டாக (இக்காலத்தே) ஓடுகின்றது, என்று அறையுநர் உளராயின் - என்று (அவற்குச்) சொல்லுபவர் இருப்பாரானால், உறல் யாம் ஒளி வாட - (தன்னை) அடைதற்கு உரியவராகிய நாம் ஒளி கெடும்படியாக, உயர்ந்தவன் விழாவினுள் - காமனுக்கு எடுத்த திருவிழாவாகிய இந்நாளில், விறல் இழையவரோடு-வெற்றியையுடைய ஆபரணங்களையுடைய பரத்தையரோடு, விளையாடுவோன் - அவன் காம இன்பத்தை அனுபவிப்பான்.

'விளையாடுவோன்' என்பது இடக்கர் (மறைத்து மொழி கிளவி)

(தனிச்சொல்)

என - என்று சொல்லி, ஆங்கு - அசை.

(சுரிதகம்)

(வரி 18-21) தணியா நோய் உழந்து-தணிதல் இல்லாத காம நோயால் வருந்தி, ஆனா தகையவள் - முன்னே கெடாத தகைமையை உடையவள், பணிபு நின் காமர் கழலடி சேரா - பணிந்து உனது அழகிய வீரக்கழலையணிந்த பாதத்தைச் சேராத, நாமம் சால் தெவ்வரின் - அச்சம் மிகுந்த பகைவரைக்காட்டிலும், பெரிது நடுங்கினள் - பெரிதும் நடுங்கினாள், (ஆதலினால்) தகை பெற - அவள் அழகு பெறும்படி, அணி கிளர் நெடுந் திண் தேர் அயர் மதி - அழகு விளங்குகின்ற பெரிய பலம் மிக்க தேரைச் செலுத்துவாயாக.

அயர்மதி என்பதனுள் 'மதி' முன்னிலை அசை.

# மானத சாத்திரம்

## [PSYCHOLOGY]

[651-வது பக்கத் தொடர்ச்சி]

### உன்னிப்பும் அக்கறையும்
### Attention and Interest

நம்முடைய மனது இயங்குநிலையிலிருக்கிறதேயன்றித் தேக்கநிலையில் இல்லை. நினைவு, துய்ப்புரவு முதலிய அனைத்தையும் இயங்குநிலைகள் எனக் கொண்டே ஆராயவேண்டும். ஆகையால் புலன் உணர்வு முதலிய பெயர்ச்சொற்களை விட "உணர்கிறேன்" "புலன்கொள்" என்ற வினைச்சொற்களே திரிபின்றிப் பொருளை யுணர்த்துகின்றன எனக் கண்டோம். வினைச்சொற்களிலும் செயப்படு பொருள் குன்றாவினையும்; அவற்றுள்ளும் செயப்பாட்டு வினையைவிட செய்வினையும், ஐயத்தை அறவே ஒழிப்பனவாம். நான்—நீ அவன் - அவள் - அது என்று பேசப்படும். செய்வோன் ஒருவன் இருக்கிறான் என்பதை நாம் மறக்கவே கூடாது. இதனை மனதில் வைத்துக்கொண்டுதான் உன்னிப்பு என்ற சொல்லைப் பயன்படுத்த வேண்டும். 'கவனமாகக் கேட்கிறான்' 'உன்னிப்பாகக் கேட்கிறான்' 'கருத்தாகக் கேட்கிறான்' என்றபோது கவனம், கருத்து, உன்னிப்பு என்ற மூன்றும் ஒரு பொருளில் பயின்று வருவதைக் காண்கிறோம். ஆனால், 'உனக்குக் கவனம் இருக்கிறதா' என்றபோது கவனம் என்பது 'நினைவு' என்ற வேறுபொருளிலும், இந்தப் பாட்டின் கருத்து என்ன என்றபோது கருத்து என்பது "உட்கோள்" என்ற வேறு பொருளிலும் வழங்கி வருவதால், அவ்விரண்டு சொற்களையும் விட்டுவிட்டு, ஊன்றி உள்ளுதலைக் குறிக்க 'உன்னிப்பு' என்ற சொல்லையே கைக்கொள்ளவேண்டியிருக்கிறது.

நமது உள்ளச்செயல் வட்டவடிவினது அல்லது வட்டத் தொடர்போல இருக்கிறது எனலாம். தொலைவில் மஞ்சட் பிழம்பொன்று தெரிகிறது. அஃது யாதாக இருக்கலாம் என்று அறிய முயன்று அதனருகே செல்கின்றேன். மாம்பழம் என அறிகின்றேன். அவ்வாறறிந்ததும் அதனைத் தின்னவேண்டி முயல்கின்றேன். கத்தியைத் தேடியெடுத்துவந்து அரிகின்றேன். அது புளிக்காது தித்திப்பதுகண்டு என் குழந்தைக்கு ஊட்டலாம் என எண்ணி அக்குழந்தையைக் கூப்பிடுகின்றேன். எனவே அறிவுநிலையும் முயற்சிநிலையும் ஒன்றனை ஒன்று தொடர்ந்து வட்டமாகச் சுழன்றுவரும் என்பதாயிற்று. ஒன்றை யுணர்கின்றேன் அதனை மேலும் நன்றாக அறிதற்கோ அதனை யடைதற்கோ, அதனின் நின்றும் தப்புதற்கோ முயற்சி செய்கின்றேன். இவ்வாறு முன்னின்ற நிலையை மாற்றுதற்கே இம்முயற்சி எழுகின்றது. இம்முயற்சியின் பயனாக அப்பொருளைக் குறித்து மேலும் சிறிது அறிந்தபோது அப்புதிய அறிவிற்கேற்றவாறு மேலும் முயல்கின்றேன். இவ்வாறு அறிதலும் முயற்சியும் உருளைவட்டத்தின் மேற்பாதியும் கீழ்ப் பாதியும் போல அமைந்து கிடப்பதால், மாறிமாறிச் சுழன்று கொண்டே சங்கிலித்தொடர்போல முடிவின்றிப்போகின்றது.

இவ்வாறு நாம் செய்வோராக நின்று உலகப் பொருளை அறிந்தும் முயன்றும் வருதலேயன்றிச் செயப்படு பொருளாக நிற்கும் நிலையும் உண்டு. உலகப் பொருள்களைப்பற்றி யறிந்தபோதோ முயன்றபோதோ தடையின்றிமுடியின் இன்பமடைந்தும், முட்டுப்பாடு நிகழின் துன்பமடைந்தும் நிற்கிறோம். ஈதே உணர்ச்சி நிலை. இவ்வுணர்ச்சி அறிவு நிலை, முயற்சி நிலை என்பனவற்றிற்குப் பின்னெழுவதா முன்னெழுவதா என்பதைப்பற்றிய போராட்டத்தை முன்னரே கண்டோம். இன்பத்தை நாடி நமது செயல் எழுகின்றதா? நமது செயல்களின் பயனாக இன்பம் அடைகின்றோமா? நம்மளவிலே பின்னெழுவதென்றே முடிவுகட்டி இக்கேள்விக்கு விடைகொடுத்துள்ளோம்.

இவ் வுணர்ச்சியே உன்னிப்பைக் கிண்டுகிறதென்பர் சிலர். நம்முடைய முயற்சியால் நம்மறிவு எவ்வாறாகின்றது என்று ஆராயும்போதே உன்னிப்பைப் பற்றிப் பேசுகிறோம். உன்னிப்பாக இருந்தால் அறிவு விளக்கமாகிறதல்லவா? தெளிவாகப் பார்க்கவோ கேட்கவோ மிக முயலும்போதே உன்னிப்பும் மிகுதியாகிறது. முயற்சி குறையக்குறைய உன்னிப்பும் குறைகிறது. தெளிவான அறிவுநிலையை உண்டுபண்ணும் முயற்சியின் மிகுதிப்பாடே உன்னிப்பெனப் பெயர் பெறுகிறது. ஆகவே, உணர்ச்சியே உன்னிப்பைத் தூண்டுகிறதென்று கூறிக்கொண்டிருப்பதை விட்டுவிட்டு உண்மையை யறியவேண்டி, 'முயற்சியைத் தூண்டுவது யாது?' என ஆராயவேண்டும். முயற்சியைத் தூண்டுவதேயன்றோ உன்னிப்பையும் தூண்டுகிறது!



நம்முடைய உள்ளத்தின் செயலுறு நிலைகள் (1) இயற்கையமைப்பாக அமைந்துகிடக்கும் இயற்கைச் செயனிலைகள் என்றும் (2) பழக்க வழக்கத்தால் எழுகின்ற செயற்கைச் செயனிலைகள் என்றும் இரண்டாகப் பிரிந்து விளங்குகின்றன. நாம் வேண்டும் என்று ஊக்கத்தோடு (will) முயன்றபோதுதான் செயற்கைச் செயனிலைகள் இயங்கும். அவ்வாறன்றி இயற்கையாக இயங்குவன இயற்கைச் செயனிலைகள் எனக்கண்டோம். சிக்கலில்லாத இவற்றைமட்டும் இங்கே ஆராய்வது விளக்கத்திற்கு இடமாகும். இவ்வியற்கைச் செயனிலைகளைத் தூண்டிவிடக்கூடிய ஏதேனும் ஒன்றை எண்ணினால்தான் நம்முள்ளே அடங்கிக் கிடக்கும் ஆற்றல் வெள்ளம் பொங்கி முயற்சி வடிவாக வெளியோடுகிறது. இயற்கையாகியவே உன்னிப்பும் அந்நிலையில் காணப்படுவதால், அதற்கு இதுதான் பிறப்பிடம். இயற்கைச் செயனிலைகளாகிய பசிநிலை முதலியவற்றைத் தூண்டக் கூடிய உணவுப் பொருள் முதலியவற்றின் எண்ணம் வரும்போது அவற்றைத் தேடுவதில் விடாமுயற்சியும் எழுகிறது. உன்னிப்போடும் உழைக்கின்றோம். இவ்வியற்கைச் செயனிலைகளைப் பற்றிய உன்னிப்பினை இயற்கை உன்னிப்பு என வழங்கலாம். பாட்டைப் பாராமற் பண்ணுவது முதலிய இடங்களில் நம்முடைய பழக்கத்தினால் எழும் செயற்கை உன்னிப்பைப் பற்றிப் பின் ஆராய்வோம். இயற்கை உன்னிப்பே, உன்னிப்பின் உண்மைவடிவைச் சிக்கலின்றித் தெளிவாக விளக்கி வைக்கும்.

புலக்கொள்கையோர் இவ்வாறு ஆராய்வதை விட்டுப் புலன்களை விளக்கமாக்கி வைப்பதே உன்னிப்பு என்று முடிவு செய்துள்ளார்கள். பண்புப் பெயர்களைப் பொருட்பெயராக்கி அதற்கு மற்றொரு பண்பைக் கற்பிப்பது அவர்கள் இயல்பு. ஒரு பொருளை ஊன்றி நோக்கியபோது, அப்பொருள் நன்கு விளங்குகின்றமையால், அதனைப் புலத்தெளிவு என வழங்கி அப்புலத்தெளிவே உன்னிப்பின் பயன் எனக் கூறுகின்றனர். அவர்கள் கூறும் இத் துய்ப்புரவை (Experience) ஆராய்வோமானால் அவர்கள் கூறும் நிலை உண்மையில் புலத்தெளிவல்ல என்றும் அறிவுத் தெளிவே என்றும் காண்கின்றோம். ஒளி ஒன்று திடீர் என்று தோன்றி மறைகின்றது. விலங்கொன்று விரைந்தோடிமறைகின்றது, இங்கெல்லாம் விரைந்தோடும் பிழம்பொன்று புலனாகியே உள்ளது. ஆனால் அவற்றை உணரும் நிலை குழம்பிக் கிடப்பதால் அவைகளைப் பற்றிய தெளிவான உணர்வு எழவில்லை. உணர்வு சிறப்புநிலையுற்று வருவதனை யாராய்ந்தபோது புலன்மாறாதிருக்கவும் நம் மறிவுநிலைக்குத் தகுந்தபடி நம்முணர்வு திருத்தமுறுவதனைக் கண்டோமல்லவா! ஆகவே அறிவுத் தெளிவு இல்லை என்று கூறவேண்டுமேயன்றிப் புலத்தெளிவு இல்லை என்று கூறுதல் கூடாது.

புலக்கொள்கையினர் புலன்களின் உரப்பினும் (Intensity) திடுக்காலுமே (Suddenness) உன்னிப்பு விரைந்தெழுகின்றது என மன்றாடுகின்றனர். மின்னொளி திடீர் என மின்னி விரைந்து மறைகின்றது. அதையே உன்னிப்பாக நமது மனம் எண்ணுகிறது. அஃது எளிதில் மனதைவிட்டு ஒழிவதில்லை. பட்டெனக் கதவு திறக்கிறது. வேறொரு வேலையாக இருந்தாலும் உடனே கதவு வழியாகத் திரும்பி உன்னிப்பாகப் பார்க்கிறோம். ஆகையால் மின்னொளி கதவினொலி இவற்றின் உரப்பும் 'திடுக்கிடு'மே உன்னிப்பை வலிந்திழுக்கின்றன என முடிவுகட்டுகின்றனர். உரப்பே உன்னிப்பை எழுப்புவதானால், இம்மின்னொளியினும் எத்துணையோ மடங்கு உரப்புள்ள கதிரவனொளியும் அவ்வாறே உன்னிப்பை வலிந்திழுக்க வேண்டுமல்லவா! ஆனால் அவ்வுரப்புள்ள கதிரவனொளியில் பகல் முழுதும் புழங்கி வரும்போதும் அதை உன்னிப் பாராதும், அதைப் பற்றிப் பேச்செழுந்தாலன்றி அதனிருப்பையே அடியோடு மறந்தும் உலவுகிறோம். எந்த மின்னொளி நமது அரைத்தூக்கத்தையும் போக்கி இரவெல்லாம் கண் விழிக்கச் செய்ததோ அந்த மின்னொளியினும் பன்மடங்கு மிகக் கதிரவனொளியில் நன்றாகத் தூங்கியும் விழுகின்றோம். கதவிடிப்பைவிட ஒலி மிக்க புகை வண்டி உரப்பும் விரைவும் மிக்கதானாலும், வழியில் திடீர் எனப் புகைவண்டித் தொடரைக் கண்ட நாம் அதை உன்னிப்பாக நோக்காமலே போகின்றோம். அதிலேறிக் குந்தியிருந்தால் நன்றாகத் தூங்கி இரவைக் கழிக்கின்றோம். ஆகவே, விரைவும் உரப்புமே உன்னிப்பை வலிந்திழுக்கின்றன என்று எப்படிக் கூறக்கூடும்? தோன்றுகின்ற புலன், கதிரவன் ஒளியைப் போலவும், புகைவண்டியினோட்டம் போலவும் இன்னதென்று விளங்குகிறதானால், அங்கே உன்னிப்பு எழுவதே இல்லை. ஆனால், இன்னதென்று விளங்காதபோதே "ஈதென்னவொலி ஈதென்ன ஒளி" ஏனெழுந்தது, எப்படி எழுந்தது? என்று அறிய முற்பட்டு முயல்கிறோம். அந்நிலையில்தான் உன்னிப்பு எழுகிறது. இன்னதென்று நாம் அறியாத பொருள் விரைவின்றியோ உரப்பின்றியோ மெல்ல எழுந்தாலும் உன்னிப்பு எழத்தான் செய்கிறது. திடீர் என ஒன்று புலப்படுமானால், அதனை நாம் இன்னதென உணராதபோது அச்சம் பிறக்கிறது. மெல்ல எழுந்தபோது விடுப்பம் பிறக்கிறது. அச்சமும் விடுப்பமும் இயற்கைச் செயனிலையைப் பற்றியன என முன்னர் நமது ஆராய்ச்சியிலே கண்டோமல்லவா?

ஏமாங்கதத் திளவரசன்
ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,
எழுதியவோர்
செந்தமிழ்க்காதை.
கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0

# கம்பராமாயணம்

## ஆரணிய காண்டம்— 8. சடாயு வுயிர்நீத்த படலம்.

[713-வது பக்கத் தொடர்ச்சி]

வெம்மையின் வெகுண்ட சீற்றம்
செம்மையாய் மாறிற் றன்றே.

பின்வரும் அவதாரத்தில் ஸீதையைக் கிளற்ற நிற்கும் இராமனுக்குச் சடாயு, விதியினை மதியினால் வெல்லவல்ல தன்மையை விளம்பியபின்,

தடைக்கரும் பெருவலிச் சம்பரப் பெயர்க்
கடைத்தொழி லவுணனற் குலிசக் கையினன்
படைத்தனன் பழியது பகழி வில்வலாய்
துடைத்தன னுந்தைதன் குவவுத் தோளினால்

[அம்புகளை எய்கின்ற விற்றொழிலில் வல்லவனே, தடுப்பதற்கு அரிய மிக்க வலிமையுடைய, சம்பரன் என்னும் பெயரையுடைய இழிவான காரியங்களைச் செய்யும் அசுரனால், வச்சிராயுதத்தைத் தாங்கிய கையையுடைய இந்திரன் பழியடைந்தான். அந்தப்பழியை உங்கள் தந்தைதன் திரண்ட தோள்களால் தீர்த்தான்]

என்று தயரதன் முன் இந்திரன் பகையை வென்று அவ்வானவர்கோனுக் குதவிசெய்த ஆற்றலையும் வண்மையையும் கூறி, அவ்வாறே,

பிள்ளைச்சொற் கிளிய ளாளைப் பிரிவுற லுற்ற பெற்றி
தள்ளுற்ற வறமுந் தேவர் துயரமுந் தந்த தேயாற்
கள்ளப்போரரக்க ரென்னுங் களையினைக் களைந்துவாழ்தி
புள்ளிற்கும் புலனில் பேய்க்குந் தாயன்னபுலவுவேலோய்

[கழுகு முதலிய பறவைகளுக்கும் அறிவில்லாத பேய்களுக்கும், பகைவரைக் கொன்று அவர் உடல்களை உணவளித்தலால் அவைகளுக்குத் தாய்போன்றதும் புலால் நாற்றம் வீசுவதும் ஆகிய வேலாயுதத்தை யுடையவனே, நிலைநிற்க மாட்டாமல் தள்ளாடுகின்ற தருமமும் தேவர்கள் படும் துயரமும் சேர்ந்து, மழலைச் சொற்களைப் பேசுகின்ற கிளிபோன்ற சீதையை நீ பிரியும்படி செய்துவைத்தன. இது காரணமாக நீ, வஞ்சனையுடைய போர்வல்ல அரக்கரை அழித்து வாழ்வாயாக]

என ஆசிகூறித், தான் தோற்க நேர்ந்த விதத்தினைச் சொல்லி முடிப்பவனாய்,

வடுக்கண்வார் கூந்த லாளை
யிராவணன் மண்ணி னோடும்
எடுத்தன னேகு வானை
யெதிர்ந்தென தாற்றல் கொண்டு
தடுத்தனெ னுவ தெல்லாந்
தவத்தரன் றந்த வாளால்
படுத்தன னிங்கு வீழ்ந்தே
னிதுவின்று பட்ட தென்றான்

[மாவடுவைப் போன்ற கண்களையும் நீண்ட கூந்தலையும்உடைய சீதையைத் தரையோடு எடுத்துச்சென்றஇராவணனை நான் எதிர்த்து எனது ஆற்றலினால் கூடியவரையிலும் தடுத்தேன்; ஆயினும் அவன் தவத்தின் பயனாகச் சிவபிரானிடத்திலிருந்து பெற்ற வாளினால் என்னை அழித்தான், இங்கு விழுந்தேன், இன்று நேர்ந்தது இது— என்று கூறினான்.]

கேட்டனன் இராமன். ஒருபோதும் முனிந்திராத இராமனுக்கு இப்பொழுது, எப்போதும் யாவரும் எவர்மாட்டும் கண்டறியாப் பெருங்கோபம் பொங்கியெழுகின்றது. சீதையைத் தான் இழந்தது தெரிந்ததும் அழியாத உள்ளம் அழிந்த இராமன் ஜடாயுவிற்கு நேர்ந்ததைக்கேட்க முனியாதமுனிவு மூள்வானாயினன்:—

கூறினமாற்றஞ் சென்று செவித்துளை குறுகா முன்ன
மூறினவுதிரஞ்செங்கணுயிர்த்தனவுயிர்ப்புச் செந்தீ
ஏறின புருவமேன்மே லிரிந்தன சுடர்க ளெங்குங்
கீறின தண்ட கோளங் கிழிந்தன கிரிக ளெல்லாம்.

[ஜடாயு சொன்ன சொற்கள் இராமனது காதுகளிற் சென்று சேர்வதன்முன், அவன்கண்களில் இரத்தம் சுரந்தது. அவன் விட்ட பெருமூச்சு நெருப்புப்பற்றி எரிந்தது. புருவங்கள் நிமிர்ந்து நெறித்தன. சூரிய சந்திரர்கள் அஞ்சி ஓடின. இவ் வண்டகோளம் பல விடங்களில் பிளந்தது. மலைகள் எல்லாம் கிழிந்தன.]

மண்ணகந் திரிய நின்ற மால்வரை திரிய மற்றைக்
கண்ணகன்புனலுங்காலுங்கதிரொடுந்திரியக்காவல்
விண்ணகந்திரியமேலைவிரிஞ்சனுந்திரியவீரன் [தன்றே
எண்ணரும் பொருள்க ளெல்லா மென்பது தெரிந்த

[பூலோக மெல்லாம் நிலைதடுமாறிச் சுழலவும், நின்ற மலைகள் எல்லாம் சுழலவும், மற்று, இடமகன்ற நீரும்காற்றும் சூரியசந்திரர்களுடனே சுழலவும், தேவர்களால் காக்கப்படுகின்ற விண்ணுலகம் சுழலவும், மேலுள்ள பிரம்மனும் சுழலவும்,—இவ்வண்ணம் இராமபிரான் தன்னிலை தடுமாறிய அளவிலே பிரபஞ்சம் அடங்கலும் ஒருங்கே தடுமாறியபடியால்—கணக்கிறந்த பொருள்கள் அனைத்தும் அவ் வீரனாகிய இராமனே என்பது தெரியலாயிற்று.]

கொடுங்கோபங் கொண்டு நின்ற இராமன்றன் கொள்கையீது. வில்லாலும் பிரம்பாலும் அடியுண்ட சிவபிரான், எண்ணரும் பொருள்களெல்லாம் தானே என்று காட்டிய செய்தியை இராமபிரான் இங்குக் கொண்ட தோர் கோபத்தால் காட்டிநின்றான். இருதிறத்திலும் பரமன் பட்டது பட்டது இப்பிரபஞ்சம்· இன்னவாறு தன்னொடு பிரசஞ்சமும் தலைதடுமாறும்படி,

குறித்தவெங் கோபம் யார்மேற்
கொள்ளுறுங் கொல்லென் றஞ்சி
வெறித்துநின் றுலக மெல்லாம்
விம்முறு கின்ற வேலைப்
பொறிப்பிதிர் படலைச் செந்தீப்
புகையொடு பொடிப்பப் பொம்மென்
றெறிப்பதோர் முறுவ றோன்ற
விராமனு மியம்ப லுற்றான்

[குறித்த இக்கோபம் யார்மேல் செலுத்தப்படுமோ என்று பயந்து உலகங்களெல்லாம் திகைத்து நின்று கலங்குகின்ற சமயத்தில், பொறிகளைச் சிதறுகின்ற மாலை போன்ற சிவந்த நெருப்பானது புகையொடு தோன்றி வீசுவதாகிய ஒரு சிரிப்புப் 'பொம்' என்று ஒலிக்க இராமனும் சொல்லலானான்]

பெண்டனி யொருத்தி தன்னைப்
பேதைவா ளரக்கன் பற்றிக்
கொண்டன னேக நீயிக்
கோளுறக் குலுங்கல் செல்லா
எண்டிசை யிறுதி யான
வுலகங்க ளிவற்றை யின்னே
கண்டவா னவர்க ளோடுங்
களையுமா றின்று காண்டி



[தனியே இருந்த ஒரு பெண்ணை மூடனாகிய ஓர் கொடிய அரக்கன் பற்றிக்கொண்டுபோக அதனால் நீ இந்தத் தீமையை அடையக் கண்டும் நடுங்காமல் இருக்கின்ற எட்டுத் திசைகளுக்குள் அடங்கியுள்ள இவ்வுலகங்கள் அனைத்தையும், இதனைக் கண்டும் சும்மாவிருந்த தேவர்களோடும் நான் அழித்தொழிக்கும் வகையை இப்பொழுது காண்]

தாரகையுதிருமாறுந்தனிக்கதிர்பிதிருமாறும்
பேரகல்வானமெங்கும்பிறங்கெரிபிறக்குமாறு
நீரொடுநிலனுங்காலுநின்றவுங்கிடந்தயாவும்
வேரொடுமழியுமாறும்விண்ணவர்விளியுமாறும்

[நக்ஷத்திரங்கள் உதிரவும், ஒப்பற்ற சூரியன் உடையவும், பெரிய இடமகன்ற வானமெங்கும் மிகுகின்ற நெருப்பு எழவும், நீரும் நிலமும் காற்றும், பஞ்சபூதங்களில் மற்ற இரண்டாகிய நெருப்பும் ஆகாயமும், இருக்கின்ற பொருள்கள் அனைத்தும் வேரோடு அழியவும், தேவர்கள் ஒழியவும்]

இக்கண மொன்றி னின்ற வேழிரே டேழு சான்ற
மிக்கனபோன்று தோன்று முலகங்கள் விளியுமாறுந்
திக்குடை யண்ட கோளப் புறத்தவுந் தீந்து நீரின்
மொக்குளினுடையுமாறுங்காணெனமுனியும்வேலை

[நிலைநிற்பன போன்றும் மிகவும் பெரியனபோன்றும் தோன்றுகின்ற பதினான்கு உலகங்களும் அழியவும், எட்டுத் திக்குடைய அண்ட கோளத்திற்கு அப்பால் இருப்பனவும் எரிந்து கருகி நீரில் எழுகின்ற குமிழிபோல அழியவும், இந்த ஒரு கணத்திற்குள்ளே நேர்வது நீ பார்— என்று வெகுள்கின்ற சமயத்தில்]

வெஞ்சுடர்க் கடவுள் மீண்டு
மேருவின் மறைய லுற்றா
னெஞ்சலி றிசையி னின்ற
யானையு மிரியல் போய
துஞ்சின வுலக மெல்லா
மென்பதென் றுணிந்த நெஞ்சி
னஞ்சின னிளைய கோவு
மயலுளோர்க் கவதி யுண்டோ

[வெப்பம் பொருந்திய கிரணங்களையுடைய சூரியன் திரும்பியோடி மேருமலையில் மறைபவன் ஆனான். குறைவற்ற எட்டுத் திக்குக்களிலும் நின்ற யானைகளும் அஞ்சி ஓடின. உலகத்திலுள்ள பொருள்கள் எல்லாம் மயங்கின என்று சொல்வானேன், இலக்குமணனே அஞ்சிநின்றான் என்றால், பின்மற்றவர்களுடைய அச்சத்திற்கு ஓர் எல்லையுண்டோ]

இராமன் உற்ற கோபம் இன்னதோர் தன்மையாயிற்று. கம்பர்பெருமான் இராகவனது இக் கோபத்தை வான்மீகத்தினின்று கொண்டாரேனும் அதனை இடம்மாற்றி அமைத்த செம்மை அறியத்தகுந்தது. வெவ்விய சீற்றம் யாரும் கொள்வார், அதனை யாவரும் அறியவும் அறிவார்; மற்று, ஆங்கிலப் புலவர் கார்லைல் என்பவர்விளக்கித்தந்த செவ்வியசீற்றத்தின் (Righteous indignation) தூய தன்மையைத் தயரதன்மைந்தர்பால் தகவுறக் காணலாம். வடமொழி வான்மீகர்நூலில், பர்ணசாலை திரும்பிய இராமன் அங்குச்சீதையைக்காணமல், அவளைத் தான் இழந்ததோர் கொடுஞ் சினத்தால்—

"ஓ லக்ஷ்மணா, என் வில்லினின்று இடையறாது விடப்படும் பாணங்களால் மொத்துண்டு ஆகாயத்தில் யாரும் செல்லமாட்டார்கள்; விலங்குகளும் பறவைகளும் மயங்கி அழிந்துவிடும்; உலகம் நிலைகுலைந்து தலைதடுமாறிப்போம். கர்ணபரியந்தம் வில்லை யிழுத்து வளைத்துப் பிராணிகளால் தாங்கமுடியாத என் அம்புகளால் சீதையின் நிமித்தம் இவ்வுலகில் பிசாசர்களும் அரக்கர்களும் இல்லையாம்படி செய்வேன். கோபத்தால் விடப்படும் என் பாணங்களுடைய பலத்தையும் அவைகள் வெகு தூரம் போவதையும்தேவர்கள் இன்று பார்க்கட்டும். மூவுலகங்களும் என் கோபத்தால் நாசமடையும்......எனது சீதையை அவள் இருந்தபடி தேவர்கள் என்னிடம் கொண்டுவந்து சேர்க்கார்களாயின் சராசரமனைத்தையும் அழித்துவிடுவேன்.

என்று கூறிய பொருளே பெரும்பாலும் மொழிபெயர்ந்ததேனும், முற்றிலும் கம்பர்நூலில் இடமும் பெயர்ந்து, ஜடாயுவைக்கண்டு அவன் பட்ட தீங்கினை இராமன் உணர்ந்தபின் நிகழ்வதாயிற்று. அங்குத் தனக்கு உற்றவோர் இழவின்பொருட்டு வெகுண்டவன் இங்குச் சடாயுவிற்கு நேர்ந்தவோர் தீதின் பொருட்டு வெகுள்கின்றான் இராமன். இது பெரியோர் இயற்கை. சடாயுவைக்கொன்ற இராவணனையும் அவனால் விளைந்த தீமையும் நினைக்குங்கால் இத்துணைக் கோபங்கொண்ட இராகவன், பிற்றைநாள் இலங்கையின்கண் அவ்விராவணனையே கண்டு, தன்னுடைய மனைவியைச் சிறைவைத்தவன் என்ற முறைமையிற் புரிந்த போரிடை,

எறித்தபோ ரரக்க ராவி
யெண்ணிலா வெள்ள மெஞ்சப்
பறித்தபோ தென்னை யந்தப்
பரிபவ முதுகிற் பற்றப்


ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்



| டானிக்குகள் : | | தைலங்கள்: | |
|---|---|---|---|
| பாதாமி லேகியம் | ரூ. 3-0-0 | சந்தனாதி 6 அவுன்ஸ் | ரூ. 1-0-0 |
| ரதிவல்லப லேகியம் | 2-0-0 | அமிர்தாமலக " | 0-12-0 |
| மஹா திராக்ஷாதி லேகியம் | 2-0-0 | பிருங்காமலக " | 0-12-0 |
| குழந்தைகளுக்கு | | ஸ்திரீகளுக்கு | |
| ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை | 0-4-0 | ஸுதக டானிக் | 2-0-0 |
| பால சஞ்சீவினி | 0-4-0 | கர்ப்பாசய டானிக் | 2-0-0 |
| பால ஸுதா (டானிக்) | 1-0-0 | ப்ரஸவ லேகியம் | 1-8-0 |

சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.

"நஞ்சன்கூடு பல்பொடி"

சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்தது) I.D.L. டின்

தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு

[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
REG. NO. M. 2324.

பொறித்தபோ தன்னு னந்தக்
கூனிகூன் போக வுண்டை
செறித்தபோ தொத்த தன்றிச்
சினவுண்மை தெரிந்த தில்லை

[எதிர்த்த போரில் வல்ல அரக்கர்களுடைய ஆவிகளைக் கணக்கில்லாமல் பறித்தபோதும், எனக்கு அவமானம் உண்டாம்படி அம்பினுல் அடித்தபோதும், அவ்விராமன், முன் பிள்ளைப்பருவத்தில் கூனியின் கூன் நிமிரும்படி வில்லுண்டை அடித்தபோது இருந்ததுபோன்று அவன் விளையாடும் முகத்தினனுய் இருந்தானேயன்றி, அவன் கோபங்கொண்டு போர்செய்தால் எவ்வாறு இருக்கும் என்பது இன்னும் தெரிவதற்கு இல்லை]

என்று அவ்விராவணனே விளம்பியவண்ணம் சீற்றம் என்பது இராமனைச் சற்றேனுஞ் சேர்ந்திலது. தனக்கென முனிதல் வெவ்விய சீற்றம். சீதையைத் தான் அரக்கரால் இழக்க நேர்ந்ததன்பொருட்டு இராமன் வான்மீகத்தில் வரம்பறு சீற்றங்கொண்டான். மற்று கம்பர் நூலிலே, அவ்விராகவன், சீதையைப் பர்ண சாலையில் காணுதபோதுங் கொண்டிலன், பிறகு, அச்சீதையைச் சிறைவைத்த இராவணனைக் கண்டபோதுங்கொண்டிலன். மற்று, சடாயுவிற்கு இக்கதியிழைத்தவரைக்கருதியே இங்கு இவனுக்கு எல்லையற்றவெகுளி யெழுகின்றது. தனக்கிழைத்த கொடுமைக்கு எதிர் வெகுள்வது வெவ்விய சீற்றம்; பிறர்க்கிழைத்த கொடுமைக்கு ஆற்றுமல் வெகுள்வது செவ்விய சீற்றம். முன், கைகேயி இராமனுக்குக் கொடுமை இழைத்தாளென்று—

விண்ணுட்டவர் மண்ணவர் விஞ்சையர் நாகர்மற்று
மெண்ணுட்டவர் யாவரு நிற்கவொர் மூவராகி
மண்ணுட்டுநர் காக்குநர் வீட்டுநனர் வந்தபோதும்
பெண்ணுட்ட மொட்டேனினிப் பேருலகத்து ளென்று

நின்று இலக்குவன்கொண்ட செவ்விய சீற்றத்திற்கு நிகராக இராமனும் சடாயுவின்பொருட்டு சீற்றங்கொண்டு நிற்றலின் அவ்விருவரும் அண்ணனுந் தம்பியுமாகின்ற முறைமையை அழகுறக் காட்டுகின்றார். தானுந் தம்பியும் ஒரு தன்மையாயிருப்பதை மறந்து இராமன் முன் இளையோனை, "விதியின் பிழை இதற்கென்னை நீ வெகுண்டது" என்று ஆற்றினன் போலும். எனினும் அவ்விதியின் பிழையே இதுவும் ஆவது இராமன் நினைவிற்கு இங்கு எட்டவில்லை என்று எண்ணுவதிலும், "மாயப் பொய்ப் பிறவிக்கும்" இது ஒல்லாமல் வெகுண்டனனென்னினுங் குறையில்லை.

## கலா நிலயக் கல்விக் கழகம்

சென்னை அட்வகேட் ஸ்ரீமான் T. N. சேஷாசலம் ஐயர், B.A., B.L., அவர்கள் சென்னையிலிருந்து கானுடுகாத்தானுக்கு மாதம் இருமுறை வந்து, ஒவ்வொரு முறையும் இரண்டு தினங்கள் தங்கி, நம் கழகத்தின் சார்பாகத் தமிழிலும் ஆங்கிலத்திலும் இலக்கியப் பாடங்கள் நடத்திவருகின்றுரென்பது அனைவருக்குந் தெரிந்திருக்கும். இவ்வகுப்பிற் சேர்ந்து இலக்கியங்களைக் கற்றுவருகின்ற நண்பர் மாத்திரமன்றி, ஏனையோர்க்கும் பயன்படுமாறு அவர் இப்பொழுது காரைக்குடியில், கம்பராமாயணக் கட்டுரைகள், தொடர்ச்சியாகநடத்துவதற்கு இசைந்திருக்கின்றுர்.

இக் கட்டுரைகள், காரைக்குடி S. M. S. ஹைஸ்கூல்கட்டிடத்தில், பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை இரண்டு தினங்கள், மாலைக் காலத்தில் நடைபெறும்.

முதல் கட்டுரை நிகழ்ச்சி—
காரைக்குடி S. M.S. ஹைஸ்கூல் கட்டிடத்தில், ஜனவரி மீ 17உ புதன் கிழமை, மாலை 6-மணிக்கு ஆரம்பமாகும்.

அவ்வமயம்,—
ம-ா-ா-ஸ்ரீ, திவான் பகதூர் A.V.P.L. சிதம்பரம் செட்டியாரவர்கள் தலைமை வகிக்கவும்,
மதுரை அட்வகேட், ஸ்ரீமான் T. C. ஸ்ரீநிவாச ஐயங்கார், B.A. B.L. M. L. C. அவர்கள் முன்னுரை நிகழ்த்தவும்,
இசைந்திருக்கின்றனர்.

அவ்வமயம் அனைவரும் வந்து கட்டுரைகளைக்கேட்டு இன்புறும்படி விழைகின்றேன்.

S. Rm. Ct. ஜம்புலிங்கம் செட்டியார்

அறிக்கை:—கானுடுகாத்தானில் நடக்கும் நம் கல்விக் கழக வகுப்பு, ஜனவரி மாதம் 20, 21உகளுக்குப் பதிலாக, 17, 18 தேதிகளுக்கு மாற்றப்பட்டிருக்கின்றது.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Business Completed During 1932 ... ... Rs. 1,55,66,720
Out of a business of ... Rs. 1,96,70,000 received in proposals.

Life Assurance is security — for the policyholder from an investment point of view. / for the policyholder and after him for his wife and children.

Claims paid over ... Rs. 1,00,00,000
Total Assets exceed ... Rs. 1,90,00,000

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., Managers.

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., Managers.

அமிர்தசாகரம்

தேகபலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் எங்களுடைய

ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்
அமிர்தசாகரம் போன்றவை.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1 0 0
5 டப்பிகள் ரூ. 4 0 0

இறும்! இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி இறும்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)